ஸ்ரீலங்கா தலைமை அஞ்சலகத்தில் பதிவுபெற்றது


# தர்க்கீதம்

7/8

வைகாசி/ஆனி — மாத இதழ் — விலை ரூபா 1-00

# மீண்டும் எரிந்தது யாழ். நகர்

- வீடுகள், கடைகள் எரிக்கப்பட்டன
- பொது நூலகம் தீயினல் முற்ருக சேதம் அடைந்தது
- 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகம் தீக்கிரை
- சந்தைக் கட்டிடங்கள் தரைமட்டம்
- மருந்துக் கடைகள் எரிக்கப்பட்டன



எரிக்கப்பட்ட நூலகம்



எரிககப்பட்ட கடைகளில் ஒருபகுதி

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெற்ற அண்மைக் கால சம்பவங்கள் தற்செயலானவையா? அல்லது இன ரீதியிலான அடக்குமுறையின் வெளிப்பாடுகளா? என்பதே இன்று பலரிடமும் எழுந்துள்ள கேள்வியாகும். 77 ஆம் ஆண்டில் யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் பொலிஸாருக்கும் பொது மக்கள் சிலருக்கும் இடையே ஏற்பட்ட சிறுசலசலப்பு நாடு முழுவதையும் பயங்கர இனக் கலவரத்தில் ஆழ்த்தியதையும், அதனுல் தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்ட பொருட்சேதம் உயிர்ச்சேதம் ஆகியவற்றையும், யாழ்நகர் எரிந்ததையும் பலரும் அறிவர். இன்றைய சூழ்நிலையில் இடம்பெற்ற நாச்சிமார் கோவிலடிச் சம்பவம் யாழ்ப்பாண மாவட்டத்தின் முக்கிய நகரங்களை எரித்து, பலரின் உயிரைப் பறித்ததுடன் அனைத்து மக்களையும் பயங்கரப் பீதிக்குக்ம் உள்ளடக்கியது. இதற்குக் காரண கர்த்தாக்கள் யார்? என்பது ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியது.

கடந்த யூன் 9ந் திகதி பாராளுமன்றத்தில் பேசிய கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர், மாவட்ட அபிவிருத்திச் சபைகளை தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக் கொண்டமையால் ஈழக் கோரிக்கை வலுஇழந்துவிடும் என அஞ்சிய சில குழுக்கள் எடுத்துக் கொண்ட தீவிர நடவடிக்கையின் பிரதி பலன்களே என்ற தோரணையில் கருத்து வெளியிட்டார். அடுத்து உரையாற்றிய காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர், பொலிஸ் மா அதிபரின் கட்டளைக்குப் பணியாத இரு நூறு பொலிஸாரே மேற்படி அட்டகாசங்களைப் புரிந்ததாகவும், அவர்கள் தற்போது எங்கிருக்கிருர்கள் என்பது தெரியவில்லை என்பதாகவும் அவர்களைத் தேடிப் பிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்ற தோரணையில் பேசியுள்ளார்.. ஆனுல் உண்மையில் நடந்தது என்ன? என்பதை அறிய நியாய சிந்தனை படைத்த பலரும் ஆவலாக உள்ளனர். மே 31ந் திகதி அன்றிரவு யாழ் நாச்சிமார் கோவிலடியில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் பொலிஸார் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்காகினர். அத்துப்பாக்கிச் சூடுகள் யாரால் நிகழ்த்தப்பட்டது என்பது இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. பொலிஸ் கான்ஸ்ரபிள்கள் புன்சிபண்டா, கனகசுந்தரம் ஆகியோரது மரண விசாரணையில் சாட்சியம் அளித்த சட்ட வைத்திய அதிகாரி, துப்பாக்கி ரவைகள் ஒரே ரகமானவை என்ற போதிலும் ஒரே துப்பாக்கியின் ரவைகள் எனக் கூறமுடியாது என்றும், புஞ்சி பண்டாவிற்கு பின்புறத்திலும் கனகசுந்தரத்திற்கு முன்முறத்திலும் நின்று சுடப்பட்டதால் மரணங்கள் சம்பவித்துள்ளது என்றும் கூறியுள்ளார். ஆனுல் இந்த இரு கான்ஸ்ரபிள்களுடன் ஏனைய இரு கான்ஸ்ரபிள்களுமாக மொத்தம் நால்வர் ஒரே வாங்கில் ஒரே முகமாகப் பார்த்தபடி இருந்துள்ளனர். யூன் 9ஆம் திகதி பாராளுமன்றத்தில் பேசிய திரு. அமிர்தலிங்கம் பொலிஸாருக்கிடையே ஏற்பட்ட வாய்த் தர்க்கத்திஞல் அவர்களே ஒருவருக்கொருவர் சுட்டிருக்கலாம் எனத் தெரிவித்துள்ளார். பரவலாகப் பொதுமக்களும் அவ்வாறே பேசிக் கொள்கின்றனர்.

இந்த நிலையிலேதான் உண்மையைக் கண்டறிய விசாரணைக் கமிஷன் தேவைப்படுகிறது. 77ஆம் ஆண்டுக் கலவர சன்சோனிக்கமிஷன் விசாரணைகள் புஸ்வாணமாகியதனுலும், 79ஆம் ஆண்டுச் சித்திரவதைகளை விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் நடவடிக்கைகளினுலும், அரசு நியமிக்கும் விசாரணைக் கமிஷன் மீது நம்பிக்கை இழந்தவர்கள் சர்வதேச ரீதியிலான விசாரணைகளை எதிர்பார்ப்பது நியாயமானதே.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து நாச்சிமார் கோவிலடிக்கு விரைந்த 200க்கும் மேற்பட்ட சீருடை அணிந்த - அணியாத பொலிஸார் நியாயமான விசாரணைக்குப் பதிலாக அட்டகாசச் செயல்களிலும், அடாவடித்தனங்களிலும் இறங்கினர். அருகிலிருந்த மூன்று வீடுகள் உட்பட மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள், கடைகளைத் தீக்கிரையாக்கியதுடன் பொதுமக்களையும் துன்புறுத்தியுள்ளனர். அன்றிரவே யாழ்பாண நகரின் பிரபல கடைகள் பலவும், யாழ்ப்பாணப் பிரதிநிதி யோகேஸ்வரனின் வீடும், பழைய சந்தைக் கட்டிடமும் மருந்துக் கடைகள் பலவும் தீக்கிரையாக்கப்பட்டது.

யூன் 1இல் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஒரே ஒரு தமிழ் தினசரியான ஈழநாடு பத்திரிகை அலுவலகமும், அதே வீதியில் அமைந்துள்ள கடைகள் பலவும் தீக்கிரையாக்கப்பட்டது. தலைசிறந்த நூலகங்களுள் ஒன்ருகத் திகழ்ந்த யாழ்-மாநகரப் பொது நூலகம் முற்ருக எரியூட்டப்பட்டது. தொண்ணூறு ஆயிரத்துக்கும் அதிகமான பெறுமதிமிக்க புத்தகங்கள் எரிந்து சாம்பலாயின.

யூன் 2 இல் அரசாங்கம் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியதுடன், யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் ஊரடங்குச் சட்டத்தையும் அமுலுக்குக் கொண்டுவந்தது. அந்த வேளையில் யாழ் நகரிலிருந்து 15 மைல் தொலைவிலுள்ள காங்கேசன்துறையில் நூறு பேரைக் கொண்ட

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

**கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால், சக்தியாய் உருவெடுக்கும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் எரிந்தது....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோஷ்டி மூன்று கடைகளைத் தரைமட்டமாக்கியது. யாழ் நகரிலிருந்து ஆறு மைல் தொலைவிலுள்ள சுன்னுகம் பழைய சந்தைக் கட்டிடமும் மற்றும் ஏழு கடைகளும் தரைமட்டமாக்கப்பட்டு ஒரு மது பானக் கடை கொள்ளையிடப் பட்டது. அன்று நண்பகல் கங்கேசன் துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்படும் கடுகதிப் புகையிரதத்தில் ஏறிய, தேர்தல் வேலைகளுக்கென யாழ் வதந் விஷேட பொலிஸாரில் சுமார் நூற்றி ஐம்பது பேர் கற்கள், தடிகள் சகிதம் காணப்பட்டனர்.

வீதி வழியாகச் சென்ற சாதாரண பொதுமங்கள் கூட ஊரடங் உத்தரவு அமுலில் இல்லாத நேரங்களில், அவ்வுத்தரவு அமுலில் இல்லாத இடங்களில் தாக்கப்பட்டும் சுடப்பட்டும் உள்ளனர். ஏறத்தாழ 10 பேர் வரை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குப் பலியாகினர். சாதாரண தமிழ் பேசும் மக்கள் உடமைக்கு மட்டுமன்றி உயிருக்குககூட பாதுகாப்பற்ற நிலைமையினை உணர்ந்து கொள்ளலாம்,

இச் சம்பவங்களைத் தொடர்ந்து ஒரு பெரிய பரபரப்பு ஏற்பட்டது. தமிழ்ப் பிரச்சனை என்றும் அரசியல் பிரச்சனை தட்டிக் கழித்தவர்கள் இது தமிழ் பேசும் மக்களின் உயிர் வாழ்க்கைப் பிரச்சனை என்றும், இதற்கு நிந்தரத் தீர்வு காணப்படவேண்டும் என்றும் பரபரப்பு அடைந்ததையும் அவதானிக்க முடிந்தது.

எனினும் இச் சம்பவங்கள் தற்செயலானவை அல்ல என்பதையும், தமிழ் பேசும் மக்களை இன ரீதியில் இனங்கண்டு கல்வி, கலாச்சார், சமூக பொருளாதார அழிவை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்பதையும் தமிழ் பேசும் மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

நூல் நிலயம் எரிக்கப்பட்டு தமிழ் பேசும் மக்களின் கல்வி வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடப்பட்டுள்ளது. சமூக தொடர்பு சாதனங்களில் ஒன்ருன 'ஈழநாடு' பத்திரிகைக் காரியாலயம் தரைமட்டமாக்கப்பட்டதோடு புத்தகக் கடைகளும் எரிக்கப்பட்டுள்ளது. சமூக, பொருளாதார நிறுவனங்களின் அடித்தளமான சந்தைகள், கோவில்கள் என்பன எரியூட்டப்பட்டுள்ளது. இவற்றை ஆழ்ந்து நோக்கும் போது இது தற்செயலாக நடந்து முடிந்த சம்பவம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மேலும் இந்த அசம்பாவிதங்கள் நிகழ்ந்த வேளையில் சிரேஷ்ட அமைச்சர்கள் உட்பட மாவட்ட அமைச்சர், உயர் அதிகாரிகள் ஆகியோர் யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருந்தபோதும், அனர்த்தங்கள் கட்டுக்கடங்காமல் ஒரு வார காலம் நீடித்து உள்ளது.

பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகும் முதலாளித்துவ அரசுகள், நாடுகளுடன் எல்லைப் அயல் பிரச்சனைகளைத் தூண்டுவதன் மூலமோ, அல்லது உள்நாட்டில் இனவெறியைத் தூண்டுவதன் மூலமோ, தமது பலவீனங்களை மூடி மறைப்பதுடன் மக்களது உணர்வுகளைத் திசை திருப்பி வருவதும் வெளிப்படையானது.

அந்த வகையில் இன்று பாரிய பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாக்கி, சர்வதேச நாணய நிதியம் கையை விரிக்கும் பட்சத்தில் திறைசேரி உண்டியலே காலியாகக்கூடிய நிலையிலுள்ள இன்றைய இலங்கையரசு இத்தகைய இன வெறியைத் தூண்டுவதன் மூலம் தங்கள் ஆட்சி அதிகாரப் பிடியை நழுவ விடாமல் பிடிக்கப் பார்க்கிருர்கள்.

எனினும் தென்னிலங்கையில் இத்தகைய இன வெறியை பரவவிடாது தடுப்பதில் போதிய அக்கறை காட்டப்பட்டுள்ளது. அசம்பாவிதங்கள் ஆரம்பித்த யூன் 1ம் திகதியிலிருந்தே பத்திரிகைத் தணிக்கை கொண்டுவரப்பட்டிருந்தது. யூன் 2ம் திகதியில் இருந்து நாடு முழுவதிலும் அவசரகால நிலைமை அமுலுக்கு வந்தது. இந்த முன்னேற்பாடான நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் அங்கொன்று இன்கொன்ருக சில சம்பவங்கள் நடந்தேறியது. புகையிரதங்கள் வழிமறிக்கப்பட்டு அதிலிருந்தவர்களின் உடமைகள் கொள்ளையிடப்பட்டு பிரயாணிகள் தாக்கப்பட்டது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும். ஆனுல் 58ம் ஆண்டைப்போலவோ அல்லது 77ம் ஆண்டைப் போலவோ ஒரு பயங்கர கலவரமாக இது இடம்பெறவில்லை. அதற்குக் காரணமாக இருக்கக்கூடியது இன்றைய அரசு ஏங்கி நிற்கும் வெளிநாட்டு மூலதனமே. 77ம் ஆண்டில் இனிக் குறைந்தது 20 வருடங்களுக்காவது இனக் கலவரம் நடக்க இடமளியோம் என மார் தட்டியவர்களின் ஆட்சியில், அது நடந்த நான்கு வருடங்களுக்கு இடையில் மற்றுமொரு கலவரம் தலைதூக்குமானுல் அந்நிய மூலதனம் இங்கு வருவதில் ஏற்படக்கூடிய தடங்கலை மிக நன்ருகவே கவனத்தில் கொண்டிருக்கிருர்கள் போல் தெரிகிறது.

இந்தச் சம்பவங்களின் பின்னணியானது. தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமின்றி, அரசை எதிர்க்கக்கூடிய அனைத்து சக்திகளுக்கும் படிப்பனையாக வேண்டும், இன்று உயர்ந்துவரும் வாழ்க்கைச் செலவுப் பிரச்சனைகளாலும், அரசின் கடைகெட்ட உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கையினுலும், மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படாமையிலும், முதலாளித்துவ சோவனிச அரசுக்கெதிராக வளர்ந்து வரும். போராட்ட உணர்வுகளை மழுங்கச் செய்து விடுவதற்காகக் கட்டவிழ்த்து விட வேண்டிய அடக்கு முறைகளுக்கு நடத்தப்பட்ட ஒத்திகைகளே யாழ்ப்பாண சம்பவங்கள். அரசை ஜனநாயக ரீதியில் எதிர்த்து வரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செல்வாக்கிற்கு உட்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்திற்கு ஏற்பட்ட நிலை அரசை எதிர்க்கக் கூடிய அனைத்து சக்திகளுக்கும் ஏற்படலாம் என்பது தெளிவு.

## உண்மையான விடுதலைக்கு வழி!

சீர்திருத்த வாதிகள் வருவார்கள். சாதியை ஒழிப்போம் என்பார்கள். மூடநம்பிக்கையை ஒழிப்டோம் என்பார்கள். சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளின் அடிப்படைக் காரணங்களை ஆராயாமல் அவற்றின் புறவெளிப்பாடுகளைத் தாக்குவதால் உருமாற்றம் தான் ஏற்படும். உட்சாரம் மாறுவதில்லை. சீர்திருத்தவாதிகள் கோட்டை விட்ட கதைகள் இந் நாட்டில் ஏராளம். சீர்திருத்தவாதிகள் சுரண்டல் வாதிகளின் சூழ்ச்சிகளுக்கு இலகுவில் பலியாகிவிடுகிருர்கள். சமுதாயத்தில் உள்ள பிரிவினைகள், சாதி சமய வேறுபாடுகள், மூட நம்பிக்கைகள், வறுமை எல்லாவற்றிற்கும் அடிப்படையாக உள்ளது. சுரண்டும் சுதந்திரமும் யாருடைய வறுமைச்கும் யாரும் பொறுப்பில்லை என்ற நிலையும் தான். ஒவ்வொருவரும் தன்னைத்தானே பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருப்பதால்தான் இவ்வாருன குறுகிய வட்டங்களில் புகுந்துகொள்ள வேண்டி இருக்கிறது. காலப் போக்கில் இவற்றின் மத்தியில் ஏற்பட்ட போட்டியும் மோதலும் இவ்வாருன ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தி விட்டன.

ஆகவே எங்களுடைய விடுதலை மொழியை அழிக்கிருர்கள் என்றுகூறித் தனிநாடு அமைத்துக்கொண்டு மற்றவற்றைச் சீர்திருத்திக் கொள்ளலாம் என்பதல்ல. எல்லா விலங்குகளையும் உடைத்தெறிந்துகொண்டு சமதர்ம சமுதாயமாக எழுவதுதான் எங்கள் இனத்தின் உண்மையான விடுதலைக்கு வழி வகுக்கும்.

அருளரின்
''லங்கா ராணி''
நாவலில் இருந்து.

மலையக மக்களின்

# வாக்குரிமையும் ஜீ. ஜீயும்

தர்க்கீகம் தை இதழில் (மூன்ருவது) 'ஈழவர் இடர்தீர' என்ற அரசியல் ஆய்வில் 'ஈழக் கோரிக்கையில் ஜீ. ஜீ. யின் பங்கு' பற்றி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தோமல்லவா? அதில் 'மரண சாசன மசோதாவான பிரஜா உரிமைச்சாசனத்தில் கையெழுத்திட்டவர் ஜீ. ஜீ'' என எழுதியதை மறுத்து திரு. குமார் பொன்னம்பலம் எழுதிய மறுப்பையும் அதுபற்றிய நம் கருத்தையும் ஐந்தாவது இதழில் பிரசுரித்திருந்தோம். இதுபற்றி கொழும்பிலிருந்து திரு. சிவா நடேசன் எழுதிய கடிதத்தின் சில தகவல்களையும் குறிப்புக்களையும் கீழே பிரசுரிக்கிரேம்.

''தர்க்கீகம் பங்குனி'' இதழில் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டத்தை எதிர்த்து வாக்களித்தார் என்பது உண்மைதான். ஆனுல் 75% மக்களுக்குபிரஜா உரிமைகிடைக்கக் கொண்டுவரப்பட்ட இந்திய—பாகிஸ்தானிய சட்டத்தினுல் 15%மானேருக்கேகிடைத்தது. அப்போது தமிழ்க் காங்கிரஸ் என்ன செய்தது?என்ற கேள்வி எழுப்புகின்றது'

''மிக முக்கியமான இரு உண்மைகள் புலனுகின்றது. அமரர் ஜீ. ஜீ. இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தை எதிர்த்தார் என்ற தர்க்கீகம் ஆசிரியரை நான் பாராட்டுகிறேன்''.

75%மானேருக்குக் கிடைக்க வேண்டிய பிரஜாவுரிமை 15% மானேருக்கு மட்டும் கிடைக்க இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தான் காரணம் என 16-4-77 வீரகேசரியில் ஜனநாயக காங்கிரஸ் உபதலைவர் வி. பி. கணேசன் கூறியுள்ளார்''.

''1948ல் இந்திய-பாகிஸ்தானிய பிரஜா உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது தோட்டங்களில் ஒரு தொழிற் சங்கம் இருந்தது. நாட்டின் பொருளாதாரமான தேயிலை, ரப்பர் தோட்டங்களில் தொழிலாளர்கள் இலங்கை இந்திய காங்கிரசில் அங்கத்தவர்களாக இருந்தனர். அச் சமயத்தில் வேலைநிறுத்தம் செய்திருப்பின் இலங்கையின் பொருளாதாரத்தை 10 நாட்களில் ஆட்டி வைத்திருக்க முடியும். ஆனுல் அப்படிச் செய்யப்படவில்லை.

பிரஜா உரிமைக்கு விண்ணப்பித்த 20% மானேரில் (228000) 75% மானேர்க்கு (168000) பேருக்கு பிரஜா உரிமை கிடைத்தது. அதில் இன்றைய மந்திரி தொண்டமான், ஐ. தொ. க. தலைவர் அஸீஸ் ஆகியோர் அடங்குவர்''.

''1956ல் இருந்து இன்று வரை பழைய அரசியல் வரலாறு மறைக்கப்பட்டு மொழி வெறி, இனவெறிமூலம் அரசியலில் முடிசூடா மன்னர்களாக தந்தை செல்வாவும், தனயன் பண்டாரநாயக்காவும் விளங்கியது நாம் அறிந்த கசப்பான உண்மை.''

''புதிதாக துளிர்விடும் சிலர் ஆரம்பத்திலே உண்மைகளை ஆராய்ந்து, ஆராய்வதன் மூலம் நல்லதொரு வழியில் சிலவற்றை எழுதினுல் அவர்களின் மனச்சாட்சி என்ன எல்லாம் எழுதுகின்றது. ஈழவரின் அரசியல் பொருளாதார மேம்பாட்டிற்காக 48ல் பெருந் தொழிற்சாலைகளை வட கீழ் மாகாணங்களில் நிறுவியவர் அமரர் ஜீ.ஜீ. இது வரலாறு''

ஜீ.ஜீ. பற்றிய ஈழவர் இடர்தீர ஆய்வுக் குறிப்பு ஜீ.ஜீயின் ஆதரவாளர் மத்தியில் அளவிலா அக்கறை ஏற்படுத்தியதைக் கண்டு தர்க்கீகம் மகிழ்வடைகிறது.

ஆனுல் வெறும் பாராளுமன்ற நடவடிக்கைகளை மட்டும் வைத்துக்கொண்டு, அதாவது 'கன்சாட்' அல்லது பதிவேடுகளின் குறிப்புகளையும், பத்திரிகைகளில் தலைவர்களின் கருத்துரைகளையும் மையமாக வைத்துக் கொண்டு ஆய்வு முடிவுக்கு வந்துவிடக்கூடாது.

பாராளுமன்ற ஒழுங்கு முறைகள் (Parliamentary Procetures) வேறு. சாசனம் Statutaro law) வேறு. முதலாவது பாராளுமன்றம், பூரண சுதந்திரம் பெற்ற இலங்கைப் பாராளுமன்றமாகக் கூட்டப்படவில்லை. சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு அளிக்கும் சோல்பரி திட்டத்தின் கீழும், (Soulboury Constitution அதி உன்னத ஆங்கில ஆட்சியின் கீழும் நடைபெற்றது. இதன் படி, சிறுபான்மையினரைப் பாதிக்கும் சட்டங்கள் பாராளுமன்றத்தால் அமுல் நடத்தப்படும் சூழ்நிலையில் சிறுபான்மைப் பிரதிநிதி ஒருவரின் ஆதரவும், சாசனத்தில் கையெழுத்தும் அவசியமானது''.

இதுபற்றி தெளிவாக ஆராய்ந்து விளக்கமான ஒரு கருத்துரையை பிரபல சட்டத் துறையைச் சேர்ந்த ஒருவர் விரைவில் தர்க்கீகம் வாசகர்களுக்கு தருவார்.

## படைத்திடுவோம் சமதர்ம ஈழம்

அர்த்தமில்லா ஒப்பந்தத்தால் அகதிகளாக்கி விட்டார்
ஆதலினுல் கப்பலிலே மந்தைகளாய் ஏற்றப்பட்டோம்
வேதனையில் மடிகின்ருேம், வெக்கையில் துவளுகின்ருேம்
போதனையைத் தாங்கிக்கொள்ளத் துணிவில்லை ஈழவரே !

பேசுகின்ற பேச்செல்லாம் பேதமற்ற சமுதாயம்
ஆளுகின்ற வர்க்கமோ, அதிகாரத்தின் வேகம்
ஓடுகின்ருேம் நாட்டைவிட்டு உரிமைகேட்க மறந்துவிட்டு
சாடுகின்ருேம் ஒப்பந்தத்தை சக்தியில்லா. ஈழவரே !

பாடுபட்டு உழைத்த நாட்டில் படுப்பதற்குப் பாயில்லை
ஓடிவந்த நாட்டில்வேலை தேடிக்கொள்ள உரிமையில்லை
வாடிவரும் சமுதாயத்தை வளங்கொழிக்கச் செய்திடுவோம்
பாடிடுவோம் ஒற்றுமையாய் பறக்குதுபார் 'தர்க்கீகம்'

காணுகின்ற கனவெல்லாம் கனல்பறக்கும் '' தமிழ்ஈழம் ''
கோருகின்ற சமுதாயம் கொள்கையில்லா குப்பைகூளம்
தேடுகின்ருேம் நாங்கள்ஒரு சிறந்த சமதர்ம ஈழம்
பூணுகின்ற கொள்கை எங்கள் புதுயுகத்தில் தர்க்கீகம்.

தமிழ்நாடு. பி. தேவதாஸ்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசு சகாப்தம்

ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்க வேண்டும் என எண்ணும்போது, முன்னைய சகாப்தங்களையும் பார்க்கவேண்டும். அந்த வகையில், இன்று ஈழக் கோரிக்கையை முன்வைத்துப் போராடும் ஈழத் தமிழர்களின் இயங்கியல் ரீதியான நடைமுறை சகாப்தத்திற்கு முந்திய சகாப்தத்தையும், அந்த சகாப்தத்தை உருவாக்கியவர்களையும் தர்க்கீக ரீதியில் கண்ணோட்டம் செய்யவேண்டும்.

ஈழக் கோரிக்கை பண்ணுகத்தில் பிரகடனமாவதற்கு முன்னர், இலங்கை வாழ் தமிழர்களின் ஜனநாயக அரசியல் கட்சியாகவிருந்தது இலங்கைத் தமிழரசுக்கட்சி. இதனாலேயே, ''இலங்கை அரசியல் வரலாற்றில் ஒற்றையாட்சி ஒவ்வாது என்பதால் நியாயமான முறையில் சமஷ்டிக்குட்பட்ட தமிழராட்சி கோரிய தமிழரசுக் கட்சியினரும், பண்ணுகத்தில் உருவான தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு குத்துவிளக்கேற்றியது அரசியல் சூட்சுமமே'' எனக் கூறினோம். ஆகவே, தமிழரசுக் கட்சியின் ஆரம்பம், இலங்கை வாழ் தமிழர்களின் ஒரு சாராரான மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டபோது, அதை எதிர்த்து அப்போதைய தமிழர்களின் பிரதிநிதித்துவ கட்சியாக இருந்த தமிழ்க் காங்கிரசில் இருந்து பிரிந்து, தந்தை செல்வாவும், தலைவர் வன்னியசிங்கமும், அப்போதைய திருமலை பாராளுமன்ற உறுப்பினருமான சிவபாலனும் ஏனையோரும் இணைந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார்கள்.

## ஒரு திசைதிருப்பமான சகாப்தம்

இந்த காலகட்டத்தில் இலங்கைவாழ் தமிழர்கட்காக, வியாபார நோக்குக்காக வெளிவந்துகொண்டிருந்த தினசரி பத்திரிகைகளையும், 'தேசாபிமானி' போன்ற கட்சிப் பத்திரிகையும் தவிர்த்து, இலங்கை வாழ் தமிழர்களின் உரிமைக் குரலாக வெளிவந்துகொண்டிருந்தது 'சுதந்திரன்' பத்திரிகை. இதன் முன்னைய ஆசிரியர்களில் முக்கியமானவர்கள்; நடேசர் ஐயர், எஸ். டி. சிவநாயகம் ஆகியோர். இதனாலேயே, ''பண்டிதர்கள் முதல், பாமரர்வரை இளையோடிய மேலெழுந்தவாரியான. அபிலாசையை பிரதிபலித்து ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம் எழுதிய எழுத்துக்கள் ஒற்றையாட்சி ஒவ்வாது எனப் புகட்டி, சமஷ்டிக்குட்பட்ட தமிழராட்சியே சாலச் சிறந்தது என்ற அடிப்படையிலான அரசியல் கோரிக்கையை முன்வைத்தவர்கள் தந்தை செல்வா, தலைவர் வன்னியசிங்கம், தளபதி அமிர்தலிங்கம், இராசதுரை மற்றும் இராசமாணிக்கம், மௌலானா போன்றோர்'' என்றோம். இந்த சகாப்தம் இலங்கைவாழ் தமிழர்களின் ஒரு திசைதிருப்பமான சகாப்தம். இதைப்பிரதிபலிப்பதே இங்கு பிரசுக்கப்பட்டிருக்கும் படம். இது 1952ஆம் ஆண்டு சாகிராக் கல்லூரியில் வைத்து எடுக்கப்பட்ட படம். இதில் அமர்ந்திருப்பவர்கள்: ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம், தலைவர் வன்னியசிங்கம்; நின்றுகொண்டிருப்பவர்கள்: எஸ். இராசதுரை, அ. அமிர்தலிங்கம்.


இவர்கள் உருவாக்கியதே அந்த திசைதிருப்பமான சகாப்தம். இதன் மகுடமாக இருந்தவர் தந்தை செல்வா. அப்போது ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம், ''சுதந்திரன்'' பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். தலைவர் வன்னியசிங்கம் வழக்கறிஞராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும், அயராது உழைக்கும் தமிழ்த் தலைவராகவும் இருந்தார். 'இராசு' சுதந்திரனில் எழுதிக்கொண்டு கிழக்கு மாகாணத்தில் ஆக்கபூர்வமான அரசியல் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். தளபதி 'அமிர்' அப்போ சட்டக் கல்லூரி மாணவராக இருந்துகொண்டே, மும்முரமான தமிழர் நலம் கருதிய அரசியல் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். இப்படத்தில் நின்றுகொண்டிருக்கும் மற்றொருவர் திரு. மணவைத்தம்பி; அப்போ தமிழ்நாட்டில் வலிவு பெற்றுக்கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொழும்பு அமைப்புப் பிரதிநிதியாக இருந்தார். இங்கு ஒரு தர்க்கீக உண்மையை உணர வேண்டும். அதாவது, பாராளுமன்ற அரசியல் ரீதியாக, தந்தை செல்வா, தலைவர் வன்னியசிங்கம் தமிழரசு அரசியல் கோரிக்கைக்கு வித்திட்டபோதும், அதை வளர்க்க, உருவாக்க அறிவு ஜீவன்கள் வேண்டுமென்பதே! அந்த அறிவு ஜீவன்கள் உருவாக்கியதே ''தமிழரசு சகாப்தம்''. இலங்கைத் தமிழர் வரலாற்றில் இது ஒரு இருபத்தைந்து ஆண்டுகால சகாப்தமாக அமைந்தது.

## ஒரு புதிய சகாப்தத்தின் நுழை வாயிலில்

இந்த சகாப்தம் அஸ்தமித்து விட்டது என்று கூறிவிடமுடியாது. ஆனால் ஸ்தம்பித்துவிட்டது எனப் பகரலாம். இதற்குப் பதிலாக, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டது. இந்த கூட்டு-அணி மற்றும் ஒரு சகாப்தமாக உருவெடுக்குமோ என்பதை காலத்தாய் தான் ஊர்ஜிதப்படுத்துவாள். ஆனால் இலங்கை வாழ் தமிழர்களுக்கான, அதாவது ஈழவருக்கான ஒரு புதிய சகாப்தத்திற்கான கரு ஊன்றிவிட்டது. இந்தக் கரு உருவெடுக்கும் போது கூட்டு-அணி வெறும் ''கூட்டணி'' யாகவல்லாமல் மக்களின் ஒட்டுமொத்தமான ஓரணியாகும். இது மக்கள் போராட்ட சரித்திர வரலாறு கற்றுத்தரும் பாடம்.

இந்தப் புதிய சகாப்தத்திற்கு ஜனநாயக ரீதியில், பாலமாக இருப்பவரும், இருக்கக் கூடியவரும் தளபதி அமிர்தலிங்கம். முந்திய சகாப்தத்தில் ஏகோபித்த ஒட்டுமொத்தமான தலைவர் தந்தை செல்வா. இன்றைய இயங்கியல் ரீதியான நடைமுறை சகாப்தத்திற்கு தலைவராக இருப்பவர் தளபதி. இதனால் தான், தந்தைக்குப்பின் தளபதி தலைவராவாரா? எனக் கேட்டோம்.

அதுமட்டுமல்லாமல், முன்னைய சகாப்தத்தின் ஆணிவேரான தலைவர் வன்னியசிங்கத்தையும், தந்தை செல்வாவையும் இழந்துவிட்டோம். அதுமட்டுமல்லாமல், அந்த சகாப்தத்தின் அறிவு ஜீவன்களின் அச்சாணியான எஸ்.டி.எஸ்.ஐ இலங்கை வாழ் தமிழ் மக்களின் உரிமைக் குரலான சுதந்திரன் பறிகொடுத்துவிட்டது. ஏன், இராசுவையும் இழந்துவிட்டது. முன்னைய சகாப்தத்திலிருந்து, எஞ்சி இருப்பவர்களுள் தளபதியும் ஒருவர். இதனாலேயே, ''இன்று இருக்கக்கூடிய தலைவர்களில் கொள்கை, கோரிக்கை, திராணியுடைய ஒருவர் அமிர்தலிங்கம் என்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழரசுக் கட்சியின் ஆரம்பம் முதல் அதன் அச்சாணியாக இருந்து வந்தவர் அமிர்தலிங்கம் என்றோம். ஆனால், முன்னைய சகாப்தத்தை உருவாக்கிய தந்தையைப்போல், மற்றுமொரு ஒட்டுமொத்தமான புதிய சகாப்தத்தை உருவாக்குவாரா தளபதி எனக் கேட்க வேண்டியுள்ளது. தர்க்கீக ரீதியில் இது சாத்தியம் என்பதை யதார்த்தவாதிகள் கூட ஏற்றுக்கொள்ளும் நிலையில்கூட, தளபதி அவ்வப்போது பிரச்சனைகளை கையாளும் விதத்தில், தனக்கே உரித்தான சாணக்கியத்தையும் - ராஜதந்திரத்தையும் கைநழுவ விட்டு விடுகிறார் என்றே கூறவேண்டும். இல்லாவிட்டால், தந்தை செல்வா ஆரம்பித்த 'சுதந்திரன்', அந்த தந்தையின் ஆவியில் நின்று ஊசலாடிக்கொண்டிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், அதன் தலைவருமான அமிர்தலிங்கத்திற்கும் சூளுரைக்குமா? இந்தச் சூளுரைகளின் சூட்சுமத்தை உணராமல் 'தனக்கு மூக்குப்போனாலும், எதிரிக்கு சகுனப்பிழை' என்று தளபதி அவ்வப்போது கூறுவதுபோல், மக்களின் அடிப்படை நலன் கருதுபவர்களுக்கும் 'பொடி' வைக்க நினைப்பாரா?



இல்லாவிட்டால், 'கொள்கை', 'கோரிக்கை' என்பதில் திணறடித்து. 'ஈழம்' ஒரு கொள்கை என்பாரா? 'ஈழம்' இலங்கைவாழ் தமிழர்களின் அபிலாசைக் கோரிக்கை என அவருக்கு தெரியாதா என்ன? அதுமட்டுமல்லாமல், இன்றைய சீனாவின் போக்கை, ஒரு மார்க்சீய—லெனினிய வாதிக்கு உரித்தான 'இயங்கியல்' தர்க்கீக ரீதியில் கண்ணோட்டம் செய்துவிட்டு, ஏனைய குறிப்புக்களையும் புலம்பியிருப்பாரா? இதற்கான காரணங்களை தர்க்கீக வாதிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

முன்னாள் 'நியூ ஸ்டேட்ஸ்மன்' (New Statesmen) ஆசிரியரும், பிரித்தானிய தொழிற் கட்சி அரசியலில் சிறந்த சிந்தனையாளருமாக கணிக்கப்பட்ட மறைந்த றிச்சாட் குறஸ்மன் (Richard Crossman) அரசியல்வாதியைப் பற்றி எழுதும்போது, இரண்டு விதமானோரைக் குறிப்பிடுகிறார். ஒன்று, அரசியலை தொழிலாக (Professional Politician) கொள்வோர். மற்றது, கொண்ட கொள்கையையும், கோரிக்கையையும் நிதர்சனமாக்க, இயங்கியல் ரீதியிலான நடைமுறைச் சூழ்நிலைக்கேற்ப அரசியலை 'துறையாக', வாகனமாக கொள்பவர். இதற்கு எடுத்துக் காட்டாக, தனது இராஜ போகங்களைத் துறந்த தொழில் கட்சி அரசியல்வாதியான அந்தனி பென்னை குறிப்பிடுகிறார். மேலும், அரசியலை தொழிலாகக் கொள்வோரிலும் இருசாராரைக் குறிப்பிடுகிறார். ஒன்று, சந்தர்ப்பவாதப் போக்குடையோர் (Opportu-its Tendency), மற்றது நிதர்சனவாதிகள் (Pragmatists). இதில் முன்னதிற்கு ரேய் ஜென்கினையும், பின்னதிற்கு முன்னாள் பிரதமர் ஹரல்ட் வில்சனையும் எடுத்துக்காட்டாக கூறுகிறார். இந்த அனுசரிப்பின்படி பார்க்கும்போது, அந்தனி பென்னைப் போல் அமிர்தலிங்கம் எந்த இராஜ போகங்களையும் இழக்காத அரசியல்வாதியான போதிலும், நிதர்சன அரசியல்வாதி என்பதை தர்க்கீகவாதிகளும் ஒப்புக்கொள்வார்கள். இதனாலேயே, ''கொண்ட கொள்கைக்காகவும், கோரிக்கைக்காகவும் பிடிவாதத்தைக் கடைப்பிடிப்பவர் அமிர்தலிங்கம். அதனாலேயே, ஈழக் கோரிக்கையின் ஈட்டிமுனைக்கு தள்ளப்பட்டுள்ளார்'' என்றோம். ஒரு நிதர்சன அரசியல்வாதி, கொண்ட கொள்கைக்காகவும், கோரிக்கைக்காகவும் தன்னை ஈடுபடுத்தும்போது, ஏற்படும் வழிமுறைப் பிரச்சினைகளே இன்று ஏற்படும் 'அமளிதுமளிகள்'. அவைகளை அணுகும் முறையில்தான் தளபதி தம்மை தலைவராக நிரூபிக்கவேண்டும்.

தர்க்கீக வாதிகளைப் பொறுத்தமட்டில், தளபதி ஒரு இயங்கியல் பரிசோதனைக்கு ஆளாவார் என்றே சொல்லவேண்டும். அதாவது, ஒரு கருத்து சக்தியாய் உருவெடுக்கும் போது, மக்கள் போராட்ட அணிகள் கூர்மையடையும் போது, ஒரு நிதர்சன அரசியல் தலைவன், தம்மையும் அந்த உண்மையான சக்தியுடன் ஈடுபடுத்திக் கொள்கிறான் என்பதே! இதை ஈழவரின் சரித்திரத்தாய் நிரூபித்துக் காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட சபைத் தேர்தல் முடிவுகள்

## ஐ. தே. கவும் தமிழர் விடுதலைக் கூட்டணியும்

மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கான தேர்தல் முடிவுகள் வெளியாகிவிட்டது. தேர்தல் நடாத்தப்பட்ட மாவட்டங்களில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய 16 மாவட்டங்களிலும் மொத்தமாக 47சத விகிதமளவு வாக்குகளே பதியப்பட்டுள்ளது. 77-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலின்போது 87சத விகிதத்துக்கும் மேலான வாக்குகள் பதிவுசெய்யப்பட்டு ஏறத்தாழ 51 சதவிகித வாக்குகளைப் பெற்று ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிபீடமேறியது. ஆனாலும் 81-ம் ஆண்டில் அதுவும் சர்வசன வாக்குரிமை கிடைத்தற்கான பொன்விழா கொண்டாடப்படும் ஆண்டில் 50 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் தமது வாக்குரிமையை உபயோகிக்கவில்லை என்றால் இது ஒரு சாதாரண விடயமாக இருக்க முடியாது. ஜனநாயகத்தின் காவலர்கள் தாமேஎன்று மார்தட்டும் இன்றைய ஆட்சியில் வாக்குப்பதிவில் ஏற்பட்ட இந்த வீழ்ச்சியானது, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்குக் கிடைத்த மிகப்பெரிய தோல்வியாகும்.

சர்வதேச ரீதியில் முதலாளித்துவ—ஏகாதிபத்திய வாதிகளின் கைப்பொம்மைகளாக இயங்கி — மக்களின் அன்றாட வாழ்க்கைச் செலவுகளை உயர்த்தி, தொழிற் சங்கங்களின் உரிமைகளுக்குக் குழிதோண்டிப் புதைத்து வருவதனாலும், தாராள இறக்குமதிக் கொள்கைகளால் உள்நாட்டு உற்பத்திகளை மழுங்கச்செய்து வருவதனாலும் ஐக்கிய தேசியக் கட்சி அரசு தோல்விகளைச் சந்திக்க வேண்டிய நிலையில் உள்ளது. மேலும் பணவீக்கம், ஆடம்பர பொருட்களின் இறக்குமதி போன்ற பல காரணங்களினால் அரசு வங்குரோத்தான நிலைமைக்கு வந்துள்ளமையையும் அவதானிக்கலாம். அந்நிய முதலீட்டாளர்களுக்குக் கதவைத்திறந்துவிட்டு சுரண்டல்களின்மூலம் அவர்கள்கொள்ளை லாபம்பெற வழிசெய்யப் பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியினரின் இந்தக் கொள்கைகளே அவர்கள் படுதோல்வியடையக் காரணமாக விளங்குகிறது.

இந்த நிலையில் தமக்கு ஏற்பட்ட தோல்விகளை மூடிமறைப்பதற்காகவே கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தமக்குப் பெரும்பான்மைப் பலம் கிடைத்துள்ளதுஎன்றும், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் தலா இரண்டு ஆசனங்களைக் கைப்பற்றிவிட்டோம் என்றும், அதனால் ஈழக் கோரிக்கை வலுவிழந்து விட்டது என்றும் பேசப்பட்டு வருகிறது. இந்தத் தோல்விகளை அடிமனதில் உணர்ந்துகொண்ட ஜனாதிபதி இனவாதத்தைக் கிளப்புவதன் மூலமும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை கண்டிப்பதன் மூலமும் சமாளிக்கப் பார்க்கின்றார் என்பதனை அவரது அண்மைக் கால பேச்சுகள் தெளிவாக்குகின்றன. ஸ்ரீ ல. சு. க. தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் தொண்டுள்ள உறவைச் சுட்டிக்காட்டி அது ஈழக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு விட்டதுஎன இனவாதத்தை தூண்டக்கூடிய விதத்திலும், தமிழர் விடுதலைக் கூட்டணி ஈழக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டது என்ற தோரணையில் பேசி வருகிறார். இருந்தும் ஈழக் கோரிக்கை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சனையல்ல; சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தின் ஒருபங்கு என்பதை உணர்ந்துகொண்ட சர்வதேச சக்திகளின் செயற்பாட்டாலும் முதலாளித்துவத்தின் கையாலாகாத்தனத்தாலும் ஈற்றில் தோல்வியையே தழுவுவார் என்பது தெளிவானது.

48-ம் ஆண்டு தொடக்கம் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களினால் படிப்படியாக சிங்களப்பிரதேசமாக்கப்பட்டுவரும் அம்பாறை மாவட்டத்தில், அதுவும் 77-ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் அம்மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதியான பொத்துவில் திரு. எம். கனகரத்தினம் கட்சிதாவியபின்பு, கூட்டணிக்குச் சார்பான ஒருபாராளுமன்றப் பிரதிநிதிகூட இல்லாத நிலையில் தமிழர் விடுதலைக்கூட்டணி சொற்ப வாக்குகள் வித்தியாசத்திலேயே இரண்டாம் ஆசனத்தைக் கைநழுவ விட்டுள்ளது. வட-கிழக்குப் பிரதேசத்தில் ஓரிரு மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்களில் பதிவான வாக்குகளில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு வாக்குகளைக்கூட ஐக்கிய தேசியக் கட்சி பெறவில்லை. இந்த அடிப்படையில் பார்க்கும் போது ஐக்கிய தேசியக்கட்சி சில ஆசனங்களைக் கைப்பற்றி இருப்பினும்கூட அக்கட்சி தோல்வியடைந்துள்ளது என்றே கொள்ளவேண்டும்.

வட-கிழக்குப் பிரதேசங்களில் மட்டுமே 74·7சத விகித மானோர் வாக்களிப்புச் செய்துள்ளனர். அவற்றில் ஏறத்தாழ மூன்றில் இரண்டுபங்கு வாக்குகள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே கிடைத்துள்ளது. எனவே, தமிழ்பேசும் மக்கள் மீண்டுமொரு முறை ஒற்றையாட்சி முறையை எதிர்த்து ஈழக் கோரிக்கையின் மீது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

மேலும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராக விழுந்த வாக்குகள் ஈழக் கோரிக்கைக்கு எதிரான வாக்குகள்எனக் கொள்வது மிகவும் அபத்தமானதொன்றாகும். ‘தமிழ் ஈழ’க் கோரிக்கையின் உள்முரண்பாடுகளினாலும், தமிழர் விடுதலைக் கூட்டணியின்ரின் கையாலாகாத்தனத்தினாலுமே பெருமளவு வாக்குகளை த. வி. கூ.விற்கு எதிராக உபயோகிக்கச் செய்துவிட்டது. அபிவிருத்திவேறு, ஈழக் கோரிக்கைவேறு என்ற எண்ண அடிப்படையும் வட-கிழக்கு மாகாணங்களின் பொருளாதார வளங்களைக் கட்டியெழுப்பத் திட்டமிட்டு செயலாற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி கடந்த காலங்களில் தவறிவிட்டமையும்கூட ஐக்கிய தேசியக்கட்சி வாக்குவேட்டையாட வழியமைத்துவிட்டது. அத்துடன் இத்தேர்தல் குட்டிப் பொதுத் தேர்தல்எனப் பேசப்பட்டிருப்பினும்கூட, சாதாரண கிராம-பட்டின சபைகளுக்கான தேர்தல் போன்றே காட்சியளித்தது. புதிய சட்ட விதிகளினாலும்,

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# தமிழகப் பத்திரிகைத் தலைப்புச் செய்திகளில்

## அண்மைய ஈழத்து அவலங்கள்

ஈழத்தில் அண்மையில் காவல் படையினரால் கட்டவிழ்த்து விடப்பட்ட அல்லோலகல்லோல அரசியல் சூழ்நிலைகள் பற்றி வெளிநாடுகள் எவ்விதம் கண்ணோக்கியிருக்கின்றன எனப் பார்க்கவேண்டியது தர்க்கீகத்தின் கடமையாகின்றது. உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்காத எந்த கால கட்டத்திலும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனையோ அல்லது ஈழக் கோரிக்கையோ அர்த்தமற்ற தொன்றாகிவிடும். அந்த கவன ஈர்ப்பின் முனையில் தான் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் தங்கியுள்ளது, என்பது தர்க்கீகவாதிகள் புரிந்து கொண்ட விடயம். ஆகவே, உலகத்தின் முக்கிய பகுதிகளில், அண்மையில் நடந்த ஈழத்தின் அவல நிகழ்ச்சிகள் பற்றி, அவதான நோக்கு செலுத்தும்போது, வெகு அண்டை நாடான இந்தியாவில், குறிப்பாக தமிழ் நாட்டில் என்ன நடந்தது? எப்படி அங்குள்ள தமிழர்கள் இதுபற்றிய தங்கள் நிலைப்பாட்டை தெரிவித்தார்கள் என்பதைப்பார்க்கவேண்டியது மிக அவசியமாகின்றது.

தமிழ்நாட்டிலேதான் உலகத் தமிழர்களின் பெரும்பகுதியினர் வாழ்கின்றார்கள். ஆகவே அவர்களுடைய கருத்தும் அக்கறையும் மிக மிக முக்கியமானதாகும். ஆனால், தமிழகத்தின் முதல்வரான புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் இதுபற்றி கருத்து எதுவும் தெரிவிக்காததைக் கண்டு யாரும் திகிலடையக் கூடாது. இருந்தும் அவர் 5-6-81 அன்று ‘தினத்தந்தி’ பத்திரிகையின் நிறுவுனர் மறைந்த ஆதித்தனாரின் அஞ்சலிக்கூட்ட வைபவத்தில் பேசும்போது ‘‘ஆதித்தனார் இருந்திருந்தால் இன்று இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையை எந்தெந்த விதத்தில் தலையங்கங்கள் தீட்டி தமிழக மக்களுக்கு தெரியப்படுத்தி இருப்பார் என்பதை அவர் இல்லாத நேரத்தில் தான் உணர முடிகின்றது’’ என்று மட்டும் குறிப்பிட்டார்;

ஆதித்தனார் போன்ற பத்திரிகை துறை முன்னோடிகள் இல்லாத பட்சத்திலும், தமிழகத்து பத்திரிகைகள் [illegible]கையில் ஏற்பட்ட நெருக்கடியை முன்எப்போதும் இல்லாத அளவுக்கு சிறப்பாகவும்-கனகச்சிதமாகவும் தமிழக மக்களுக்கு தெரியப்படுத்தியிருந்ததை புரட்சித் தலைவர் அறியவில்லைப் போலும். 1977-ம் ஆண்டு கலவரத்தின் போது கலைஞர் கருணாநிதி தலைமையில் கண்டன ஊர்வலம் காலம் தாழ்த்தி நடாத்தப்படும்வரை தமிழகப் பத்திரிகைகள் மௌனம் சாதித்தன. ஆனால் இம்முறை இனக் கலவரம் ஆரம்பமாகும் அறிகுறிதென்பட்டது முதல் அதைத் தடுக்கவேண்டுமென்ற எண்ண நோக்குடன் தமிழகத்து தமிழ்-ஆங்கில பத்திரிகைகள் தமது பத்திரிகைத் தர்மநெறி சார்ந்து கடமை புரிந்ததை காணக்கூடியதாக இருந்தது. அது மட்டுமல்லாமல் அர்த்தபுஷ்டியான தலையங்கங்களோடு தலைப்புச் செய்திகளையும் பிரசுரித்தன. ஜூன் 4-ம் திகதி வெளிவந்த பத்திரிகைகள் பலவற்றில் ஒரு பொதுவான அம்சத்தை காணக்கூடியதாக இருந்தது. முக்கியமாக ‘‘தினமணி’’ ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ (Indian express) ஆகிய இரு பத்திரிகைகளும், இலங்கையில் கட்டவிழ்த்து விடப்பட்ட அதிகார வெறியினால் பாதிக்கப்பட்ட தமிழர்களைப்பற்றி குறிப்பிடும்போது ஈழவர் நிலையை தமிழக மக்களின் கவனத்துக்கு கொண்டுவந்த ‘‘சுவரொட்டிகள்’’ பற்றி குறிப்பிட்டிருந்தது. ‘‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’’ பத்திரிகை "Posters Proclaiming Eelam (Jaffna) is burning again appeared several Parts of madras on Thutsday Reports U. N. I.

The posters Condemned Sinhalese army-police atrocities on tamil organizations includig T. U. L. F. office and Eelanadu.

The posters carried the names of six organization including Indo-Eelam Friendship Association New Delhi, Eelam Repatriates organization Madras எனக் குறிப்பிட்டது. இதே செய்தியை ‘தினமணி’’ பிரசுரித்திருந்தது.

இச்செய்திகள் மூலம் இலங்கையில் நடந்துகொண்டிருந்த நிலைமைகளை அப்பட்டமாகத் தெரிவித்தன. இந்த நிலைமைகள், செய்திகள் என்ன என்பதை தர்க்கீகம் வாசகர்களுக்கு தலைப்புச் செய்தியில் கொடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல் 5-6-81 வெளிவந்த தமிழ்ப் பத்திரிகைகள் குறிப்பாக ‘‘மாலைமுரசு’’ ‘‘எதிரொலி’’ ‘‘தினகரன்’’ பத்திரிகைகள் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டன.

**மாலைமுரசு:** இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து சென்னையில் நேற்று அனைத்துக் கல்லூரி மாணவர்களும் ஊர்வலம் நடாத்தினார்கள். சட்டக் கல்லூரியில் இந்து ஊர்வலம் புறப்பட்டு இலங்கை தூதரகத்துக்கு சென்றது. இலங்கைத் தூதுவருக்கு மனு கொடுக்கப்பட்டது.

**தினகரன்:** தமிழர்கள் கொலை செய்யப்படுவதைக் கண்டித்து சென்னையில் நேற்று மாணவர்கள் ஊர்வலம் நடாத்தினார்கள். சென்னை சட்டக்கல்லூரியில் இருந்து புறப்பட்ட இந்த ஊர்வலத்தில் அனைத்துக் கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டனர்.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயர்லாந்தில்

# முதலாளித்துவ அடக்குமுறை

## ஐரிஸ் விடுதலை வீரர் மரணம்

அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் பிரிட்டன் அயர்லாந்துப் பிரதேசத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்பதையே தமது முக்கிய கோரிக்கையாகக் கொண்டு போராடிவரும் அயர்லாந்து குடியரசுஇராணுவத்தின்(Irish Republican Army) நடவடிக்கைகள் சிறைச்சாலைகளுக்குள்ளும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. தமது மக்களின் சுதந்திரத்திற்காகப் போராடிச் சிறைசென்றுள்ள அயரிஷ் விடுதலைபோராளிகளுக்கு "அரசியல் கைதி" என்ற அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் எனக்கோரி உண்ணு விரதத்தை ஆரம்பித்தவர்களில் திரு. பொபி சான்ட்ஸ், திரு. பிரான்சிஸ் ஹியூஸ், திரு. ரேமன்ட் மக்ரீஷ், திரு. எகரு ஆகியோரின் உயிர் பிரிந்துவிட்டது. திருமதி தட்சரின் அரசாங்கம் இவர்களது கோரிக்கைகளுக்கு இணங்காத பிடிவாதப் போக்கைக் கைக்கொள்ளுமானுல், சிறையிலுள்ள 414 போராளிகளும் இந்த நிலைக்கு உள்ளாக வேண்டிவரலாம்என அவதானிகள் எச்சரித்துள்ளனர்.

அத்திலாந்திக் சமுத்திரத்தில் பிரிட்டனை ஒட்டிய ஒரு தீவாகக் காணப்படும் அயர்லாந்துக்கும் பிரிட்டனுக்கும் இடையேயான பூசல்கள் இன்று—நேற்று எற்பட்டவையல்ல. சுமார் 700-க்கும் மேற பட்ட ஆண்டுகால மாகவே இருதரப்பினரும் முட்டிமோதி வந்துள்ளனர். 1916–ல் ஏற்பட்ட பெரும் கலவரங்களையடுத்து 1920-ம் ஆண்டில் பிரித்தானிய பாராளுமன்றத்தின் கட்டளைச்சட்டம் ஒன்றின் மூலம் அயர்லாந்து,வட—அயர்லாந்து, தென்—அயர்லாந்து எனபிரிக்கப்பட்டது. இருந்தும் 1921-ம் ஆண்டில் அயர்லாந்து டொமினியன் அந்தஸ்திலிருந்து குடியரசானபோது வட-அயர்லாந்து பிரிட்டனின் ஒரு அங்கமாகவே இருந்துவிட முடிவு செய்தது.

பிரிட்டனிலிருந்து சென்று குடியேறிய புரட்டஸ்தாந்து மதத்தவர்களைப் பெரும்பான்மையினராகவும், அயர்லாந்தின் பூர்வீகக் குடிகளான கத்தோலிக்கர்களைச் சிறுபான்மையினராகவும் கொண்டுள்ள வட அயர்லாந்து ஜனநாயக ரீதியில் இத்தகைய ஒரு முடிவை வெளியிட்டது குறித்து எவரும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனினும் பூர்வீகக்குடிகளான கத்தோலிக்கர்களுக்கும், பிரித்தானிய வம்சாவழியினரான புட்ரடஸ்தாந்து மதத்தவர்களுக்கும் இடையே மோதல்கள் நடந்தவண்ணமே இருந்தன. 1969-ம் ஆண்டில் இடம்பெற்ற இத்தகைய மோதல்கள் உள்நாட்டுப் போர்ஒன்றுக்கான சூழ்நிலையைத் தோற்றுவித்து விட்டதுஎனக் காரணங்கூறி பிரிட்டிஷ் துருப்புக்கள் தலையிட்டன. இவ்வாறு தலையீடுசெய்த துருப்புக்கள் பெரும் பான்மையினரான புரட்டஸ்தாந்து மக்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டதும் இயல்பாக எதிர்பார்க்கக்கூடியதே.

இந்த நிலையில்தான் 1954-ம் ஆண்டில் பிறந்து 1972-ல் இருந்து தீவிர அரசியல் ஈடுபாடுகொண்டிருந்த திரு. பொபிசான்ட்ஸ் பயங்கர ஆயுதங்களை வைத்திருந்தார் என்னும் குற்றச்சாட்டில் 1978-ல் 14 ஆண்டுகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு சிறைச்சாலை புகுந்தார். இதில் வேடிக்கை என்னவெனில் திரு. பொபிசான்ட்சும் அவருடன் இணைந்த ஐவரும் தம்மை விசாரித்த நீதிமன்றத்தை அங்கீகரிக்க மறுத்து 63 சாட்சிகளையும் குறுக்குவிசாரணை செய்ய மறுத்தமையாகும்.

இவ்வாறு சிறையிலிருந்த இப் போராளிகள் தம்மை அரசியல் கைதிகளாக அங்கீகரிக்கக்கோரி உண்ணுவிரதம் இருக்க ஆரம்பித்தனர். கடந்த மார்ச் முதலாம் திகதியே உண்ணுவிரதம் ஆரம்பிக்கப்பட்டாலும், ஆரம்பத்தில் யாரும் பொருட்படுத்தவில்லை. இந்த உண்ணுவிரதப் போராட்டம் ஒரு மாதத்தைக் கடந்தபோது வெளிஉலகுக்குத் தெரிய ஆரம்பித்தது. இந்தவேளையில் பிராங்க் மக்குயர் என்ற எம்பியின் மரணத்தால் பெர்மாஞு-சவுத்திரோன் என்ற தொகுதியில்ஏற்பட்ட இடைத் தேர்தலில் சிறையில் இருந்த பொபி நிறுத்தப்பட்டார். ஏப்ரல் 10-ந்திகதி நடைபெற்ற இத் தேர்தலில் 14.6 பெரும் பான்மை வாக்குகளால் ஹரல்ட் வெஸ்ட் என்பாரைத் தோற்கடித்து பொபி வெற்றி பெற்றுர். ஆனுல் பாரர்ளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட சில தினங்களிலேயே தம் 66-வதுநாள் உண்ணு நோன்பினுல் உயிர் நீத்தார்.

உண்ணுவிரதத்தால் உயிர் நீத்த பிரித்தானிய பாராளுமன்றத்தின் முதல் பிரதிநிதி என்ற பெயரைப் பெறும் பொபியின் மறைவு அயர்லாந்தின் பல பாகங்களிலும் விடுதலை வேட்கையினை உந்தச் செய்துள்ளது.

1920-ம் ஆண்டில் லண்டன் பிரிக்ஸ்டன் சிறைச்சாலையில் தமது 74-வது நாள் உண்ணு நோன்பில் மரணம் அடைந்த அயர்லாந்து கோர்க் நகர மேயர் டெரன்ஸ் மெக்ஸ்வினி, 1946–ம் ஆண்டில் இதே போராட்டத்தில் மரணமடைந்த சீன் மெக்கோகி இவர்களது வரிசையில் இன்று பொபி சான்ட்ஸ், பிரான்சிஸ் ஹியூஸ், ரேமஸ்ட் மக்ரீஷ், எக்கரா என்ற புதுப் பெயர்கள் பதிவுசெய்யப் பட்டுவிட்டன.

இந்த நிலையிலும் உலகை உறிஞ்சி வாழும் சக்திகளும், அவர்களின் சகாக்களும் போராட்டவாதிகளைக் கேலிசெய்வது விந்தையான தாகும். சிறைச்சாலைகளுக்கு உள்ளும் தமது போராட்டத்தை விஸ்தரித்து, தமது கோரிக்கைகளில் உறுதியாகநின்று போராடிவரும் அயரிஷ் குடியரசு இராணுவத்தினரை "அவர்கள் தம்மைத்தாமே அழித்துக் கொள்கிறுர்கள்" என மாக்கிரேட் தட்சர் கேலிசெய்திருப் [illegible] மக்களின் விசனத்துக்கு உரியதாகும்.

உலகிலேயே ஜனநாயகத்தின் பிறப்பிடமாகப் பறைசாற்றப்படும் பிரித்தானியாவில்கூட மனிதனது உரிமைகள் பறிக்கப்படுவது முதலாளித்துவ ஜனநாயகத்தின் அப்பட்டமான போலித்தன்மையை புட்டுக் காட்டுவதாக அமைகிறது, ஜனநாயகம்எனப் பேசப்படுவதெல்லாம் நடைமுறையில் எந்த ரீதியில் அமைகின்றது என்பதை ஐரிஸ் மக்களின் போராட்டங்களிலிருந்து உலக மக்களுக்குக் கிடைக்கும் ஒருபடிப்பினையாகும்.

நமிபியாவிலும் சிப்பாப்பேயிலும் சிறுபான்மையாகஉள்ள வெள்ளையரின் நலன்களில் கூடுதலான அக்கறை காட்டிவரும் பிரித்தானியா அயர்லாந்து பூர்வீகக்குடிகளின் விடயத்தில் மட்டும் இப்படிக் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொள்வது வேதனைக்கு உரியதாகும்.

# மேற்காசியாவில் பதட்டம்

மத்திய கிழக்கில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களைப் பாதுகாத்துவரும் அமெரிக்கரின் செல்லப் பிள்ளையான இஸ்ரேல் மத்திய கிழக்குப் பிரதேசத்தில் ஐந்தாவது யுத்தம் ஒன்று ஏற்படக்காரணகர்த்தாவாக விளங்குமா ?என்னும் கேள்வி தற்போது எழுந்துள்ளது.

ஈரான்-ஈராக் போரைத் தொடர்ந்து ஒருவித சலன—சபலநிலை ஏற்பட்டிருந்தாலும், தற்போது நெருக்கடி முற்றிக் காணப்படுகிறது. ஈரான்-ஈராக் யுத்தத்தில் ஜோர்தான் ஈராக்கை ஆதரிக்க முற்பட்டதும், அதனுல் சிரியா தனது துருப்புகளை ஈரானுக்கு ஆதரவாக ஜோர்தான் எல்லைக்கு நகர்த்தியதும் பழைய செய்திகள்.

1975-ம் ஆண்டுக் காலகட்டத்தில் லெபனுனுக்குள் ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரத்தையடுத்து லெபனுனிய இராணுவம் சிதறுண்டதும், அதனைத் தொடர்ந்து இஸ்ரேலின் ஆதரவு பெற்றுவரும் கிறிஸ்தவ வலதுசாரிப் படைகளுக்கும் பாலஸ்தீனிய ஆதரவுப் படைகளுக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டன. இந்தநிலையில் 21 நாடுகளைக் கொண்ட அரபுலீக் 30,000 வீரர்களைக் கொண்ட சமாதானப் படை ஒன்றை அங்கு நிறுவியதன் மூலம் அமைதி பேணப்பட்டு வந்தது. இச்சமாதானப் படையில் பெரும்பான்மையான வீரர்கள் சிரிய நாட்டைச் சேர்ந்தவர்கள். இதனைவிட ஐக்கிய நாடுகளின் சமாதானப் படைவீரர்களும் லெபனுனில் அமைதி நிலைநாட்டுவதில் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் கிறிஸ்தவ வலதுசாரிப் படையினருக்கும்,அரபுலீக் சமாதானப் படையில் அங்கம் வகித்த சிரியா வீரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களே சமீபத்திய சம்பவங்களுக்குத் தூபம் போட்டன. இந்த மோதல்களைத் தொடர்ந்து சிரியா லெபனுனுக்கு அனுப்பிய இரு கெலிக்கொப்டர்களையும் இஸ்ரேல்பந்தாடியது. இதனுல் சிரியா தன் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை லெபனுன் எல்லையில் உள்ள பக்கா பள்ளத்தாக்கிற்கு நகர்த்தியதுடன் சிரிய-லெபனுன் எல்லைக்கு மேலாகப் பறந்த இரு இஸ்ரேலிய உளவு விமானங்களைச் சுட்டு வீழ்த்தியது.

இச் சம்பவத்தை உதாரணம் காட்டி இஸ்ரேல் தனது "பாதுகாப்புக்கு" களங்கம் ஏற்பட்டு விட்டதாகக் கூப்பாடுபோட ஆரம்பித்து, சிரியா தன் ஏவுகணைகளை லெபனுனுக்குள் இருந்து திரும்பப் பெறுமாறு கோரிக்கை விடுத்து, அவ்வாறு தவறும் பட்சத்தில் அவற்றை அழித்துவிடப் போவதாக மிரட்டிவருகிறது.

சிரியாவின் இத்தகைய விமான எதிர்ப்பு ஏவுகணைகள் லெபனுன் எல்லையில் நிலைகொண்டுள்ளமையானது, இஸ்ரேல் காலங்காலமாக பலஸ்தீன முகாம்கள்மீது நடாத்திவந்த விமானத் தாக்குதல்களுக்கு முற்றுப் புள்ளி வைத்துள்ளதுடன், இஸ்ரேலின் சுயேச்சையான தாக்குதல்களுக்கு ஒரு கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தி உள்ளது.

இதுநிலை தூங்கிக்கொண்டிருந்த "சமாதானத் தூதுவரை" விழிப்புக் கொள்ளச்செய்துவிட்டது. எனவே, வெள்ளை மாளிகையில் இருந்து றீகன் நிர்வாகத்தின் சமாதானப் புறவாகத் திரு. பிலிப் ஹபீப், டெல்அவிவ்—டமாஸ்கஸ்—பெய்ரூட் ஆகியவற்றிற்குப் பறந்துசென்று சமாதான பேச்சுவார்த்தைகளை நடத்த முற்பட்டு உள்ளார்.

இவர்களது சமாதானக் கோரிக்கையில் முக்கியமாக இருந்துவருவது சிரியாவின் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் லெபனுன் பிரதேசத்தில் இருந்து வாபஸ் பெறப்பட வேண்டும் என்பதாகும். ஆனுல் உண்மையில் இவ்வகையான ஏவுகணைகள் தற்பாதுகாப்புக்கானவையே அல்லாது தாக்குதல்களுக்குப் பயன்படக் கூடியவை அல்ல என்பதனை அனைவரும் ஒப்புக்கொள்வர். அப்படியாயின் இந்தஏவுககணைத்திரும்பப் பெறுமாறு இஸ்ரேலும்—அமெரிக்காவும் வலியுறுத்துவதானது, லெபனுன் பிரதேசத்தில் இஸ்ரேல் சுதந்திரமாகப் பறப்பதனை உறுதிசெய்வதற்காகவா? என்ற கேள்வியே இங்கு எழுப்பத் தோன்றுகின்றது.

டமாஸ்கஸ் விஜயம் மேற்கொண்ட அமெரிக்க விசேட பிரதிநிதி சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து தம்முடன் முழுமையான பேச்சுவார்த்தை எதுவும் நடத்தவில்லை என்றும், லெபனுன் பிரதேசத்தில் இருந்து தன் ஏவுகணைகளை வாபஸ் பெறப் போவதில்லை என்றும், சிரிய ஜனுதிபதி அல்-அசாத் கூறியுள்ள அதே வேளையில் இஸ்ரேலிய தொலைக்காட்சிச் சேவை சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்து ஒலிபரப்பியதானது, எதிர்வரும் ஜூன் 30-ல் நடக்கவிருக்கும் இஸ்ரேலிய பாராளுமன்றத் தேர்தலில் தற்போதைய பிரதமர் பெகினுக்கு ஆதரவு திரட்டுவதற்காகவே என்பது வெள்ளிடைமலை.

எகிப்துடன் மற்ற அரபுநாடுகளுக்குள்ள மனக் கசப்பாலும், ஈரான்-ஈராக் போராலும்இது போன்ற பிறவற்றுலும் அரபு உலகம் பிளவுபட்டுப்போய்க் கிடக்கிறது என்னும் எண்ணப்பாட்டின் அடிப்படையில் சிரியாவைத் தாக்க முற்பட்ட இஸ்ரேலியர்களுக்கு, தமதுஉள் முரண்பாடுகளை விடுத்து இஸ்ரேலியர்களுக்கு எதிராகச் சிரியாவிற்கு ஆதரவு கொடுக்க முன்வந்த சவூதி அரேபியா, ஈராக், குவைத் போன்ற நாடுகளின் செயல் பேரதிர்ச்சி தருவதாக அமைந்துள்ளது.

இந்த நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற போர்வையில் பேரம்பேச முற்பட்டுள்ளவர்கள் லெபனுனுக்குள் சிரியா தன் விமான எதிர்ப்பு

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களூர்

# கந்தளாயில் காணி பறிப்பு!

# ஈழப் புரட்சிக்கு வழிவகுப்பு!

திருகோணமலை மாவட்டமாகக் கருதப்படும் பிரதேசத்தில் கந்தளாய் என்னும் கிராமம் அமைந்துள்ளதை நாம் அறிவோம். இப் பிரதேசத்தில் திட்டமிட்டு ஈழவர்களின் (தமிழ் பேசும் மக்களின்) உரிமைகள், உடமைகள், இறைமைகள் எல்லாவற்றையும் பறிக்கும் வேட்டையில் உச்சக் கட்டத்தை அண்மித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில் ஈழவர் இடர்தீர ய்வு செய்யும்போது ஓரளவு குறுகிய கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்து வர உந்தப்படுகின்றோம்.

கந்தளாய் என்ற பெயரைக் கொண்ட இப்பிரதேசம் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் காலத்தில் போற்றப்பட்ட, நிர்வகிக்கப்பட்ட பிரதேசம். கண் பார்வை இழந்திருந்த ஒரு மன்னனுக்கு இப் பிரதேசத்தில் பார்வை ஏற்பட்டமையினால் கண் தழைத்த இடம் என்ற காரணத்தினால்.

அந்த இடத்திற்கு கண்தலை என்று அம்மன்னன் பெயரிட்டான் என கல் வெட்டு வரலாறு கூறுகிறது. இன்னும் பல சான்றுகளையும் கொண்டு நாம் இப் பிரதேசம் தனித் தமிழ் பிரதேசம் என்பதை நிச்சயப்படுத்தலாம். சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் காலத்தில் கட்டப்பட்ட சிவன் கோயில் ஒன்று அழிந்த நிலையில் கந்தளாயில் காணப்படுகின்றது. இந்தக் கோயில் கிட்டத்தட்ட 40 ஏக்கர் வரை பரந்திருந்தது என்பதனை நிரூபிக்கும் வண்ணம் தொடர்ச்சியான கட்டட அழிவுகளும் சிலைகளும் இப்பிரதேசத்தில் புதையுண்டும் அழிந்தும் கிடக்கின்றது. 1975–ம் ஆண்டு கந்தளாய் பொலீஸ் நிலையத்துக்கு அருகாமையில் தண்ணீர்க் குழாய் வைக்க வீதி ஓரமாக கால்வாய் வெட்டிக் கொண்டு போகும்போது ஒரு ஐம்பொன் விக்கிரகமொன்று கண்டெடுக்கப்பட்டது. அத்துடன் ஒரு பெரிய பித்தளை மணியும், மண் விளக்குகளும் கண்டெடுக்கப்பட்டன. இந்த விக்கிரகத்தின் நிறை சுமார் இரண்டு அந்தர். இதில் தங்கமும் குறிப்பிடத்தக்க அளவு இருக்குமென்பதில் ஐயமில்லை. கந்தளாயில் 53ஆம் ஆண்டு பௌத்த விகாரை ஒன்று கட்டப்பட்டது, இதனை ஆக்கிரமிப்பின் சின்னம் என்றோ, இதன்மூலம் தமது அமைதியான வாழ்வுக்குப் பங்கம் ஏற்படும் என்றோ இப்பகுதி மக்கள் அப்போது உணரவில்லை.

இருந்தும் இது அவர்களை எதிர்நோக்கும் ஒரு பிரச்சனையாகத் தெரியவில்லை. தமிழ் பேசும் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளில் இது சம்பந்தப்படாததாலும் அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையில் இது ஏதேனும் ஒரு பாதிப்பை ஏற்படுத்தாததாலும் இதனை யாரும் தட்டிக் கேட்கவில்லை. ஆனால் திட்டமிட்டு தமிழ்மக்களைப் புறக்கணிக்கும், ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகள் என்பதைமட்டும் காலப்போக்கில் உணர்ந்துகொண்டனர்.

இந்தப் பிரதேசத்தில் 1953ஆம் ஆண்டுக்கு முன்னர் தனித் தமிழ்பேசும் மக்களே வாழ்ந்துவந்தனர். 1953ஆம் ஆண்டு இங்கு சீனி ஆலை கட்டப்பட்டு சிங்கள உத்தியோகத்தர்களைக் கூடுதலாக வேலைக்கு அமர்த்தி அவர்கள் மூலம் பல மேல்மாகாணச் சிங்களக் குடும்பங்களின் அத்துமீறிய குடியேற்றத்தை சிங்கள முதலாளித்துவ அரசாங்கம் ஏற்படுத்தியது. இந்தக் காலகட்டத்தில் 1953இல் கந்தளாய்க் குடியேற்றத் திட்டம் கொண்டுவரப்பட்டது. இத் திட்டத்தின்பயனாக தம்பலகாமம் முதல், கந்தளாய், வட்டுக்கச்சி போன்ற பகுதிகளில் மொத்தம் 3000 குடும்பங்கள் வரை குடியேற்றப்பட்டுள்ளன. இதில் தமிழ்பேசும் மக்கள் 400 குடும்பங்கள் வரையே குடியேற்றப்பட்டுள்ளனர். மிகுதி சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இதில் 5600 ஏக்கர் மேட்டு நிலங்களையும் 9000 ஏக்கர் நீர்ப்பாய்ச்சல் காணிகளையும் சிங்கள முதலாளித்துவ அரசாங்கம் ஆக்கிரமித்துள்ளது,

இதனைவிட சிங்கள அரசாங்கத்தின் சட்டபூர்வ அங்கிகாரமின்றி அத்துமீறிய குடியேற்றமாக பிரதான வீதி ஓரங்களையும் தரிசு நிலங்களையும் கடைசியில் தமிழ்பேசும் மக்களின் பராமரிப்பில் இருந்த புராதன வயல்களையும் சிங்கள முதலாளிகள் ஆக்கிரமித்துள்ளனர். இவற்றிற்கு முக்கியஏதுவாக கந்தளாய் சீனி ஆலை அமைந்துள்ளது.

இந்த இடத்தில் புள்ளி விபரப்படி பார்ப்பது பொருத்தமான ஒன்றாக இருக்கலாம். 1881ஆம் ஆண்டில் ஏறத்தாழ 20,000 தமிழ் பேசும் மக்களும், 1,000க்கும் உட்பட்ட சிங்கள மக்களுமே திருமலை மாவட்டத்தில் வாழ்ந்துள்ளனர். ஆனால் 1971ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 1,31,000 தமிழ்பேசும் மக்களும், 55,000 சிங்கள மக்களும் வாழ்கின்றனர். 1881ம் ஆண்டில் 20:1ஆக இருந்த விகிதாசாரம் 1971ஆம் ஆண்டில் ஏறத்தாழ 2:1 ஆக வளர்ச்சி யுற்றிருப்பதனைக் காணமுடியும். இவ்வாறான சனத்தொகை வளர்ச்சிப் போக்கிற்கு இயற்கை அதிகரிப்பு மட்டும் காரணம் அல்ல என்பதனை ஊகிக்க முடியும், பரவலாக ஏற்படுத்தப்பட்ட குடியேற்றத் திட்டங்களின் மூலம் சிங்கள மக்களின் எண்ணிக்கை பெருமளவு கூட்டப்பட்டதாலும், மீன்பிடி, வியாபாரம் போன்ற பல காரணங்களின்மூலம் குடியேறிய சிங்கள மக்களின் எண்ணிக்கையினாலுமே இவ் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்பது வெள்ளிடை மலை.

மேற்கண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் நேரடியாகத் தமிழ்பேசும் மக்களைப் பாதிக்காவிட்டாலும் அண்மைக்காலங்களில் நடைபெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் நேரடியாகத் தமிழ் பேசும் மக்களை வருத்தத்திற்கும் ஆத்திரத்திற்கும், விழிப்பிற்கும் உள்ளாக்கியிருக்கின்றது என்பதைக் கண்கூடாகக் காண்கின்

குமார்

றோம். இப்படியான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் கந்தளாய் அல்லைவீதியின் இடையில் ''பலகாரம் சுட்ட மடு'' என்ற நீர்ப்பாய்ச்சல் பள்ளக் காணிகள் பறிக்கப்பட்டதும் அடங்கும்.

## ''பலகாரம் சுட்ட மடு''

'' பலகாரம் சுட்ட மடு '' ''முதலை மடு போன்ற சில பள்ளநிலங்கள் கந்தளாயில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள் சிலர் ஏறத்தாழ 15 வருடங்களுக்கு முன்பு காணியின் தன்மையை அறிந்து காணியைச் செய்கைபண்ண விரும்பினர். இந்தக் காணிப் பகுதி கந்தளாயிலிருந்து அல்லைக்குச் செல்லும் வீதியில் 12ஆம் மைல் கல்லுக்கருகாமையில் யானைகள் வாழுகின்ற காட்டினுள்ளே சுமார் 4 மைல் வரை ஊடுருவிச் சென்றால் அந்த நிலப்பகுதியைக் காணலாம். அந்த நிலப்பகுதி கந்தளாய் சீனி ஆலையின் வடி நீரினாலும், களுகெங்கையின் ஒரு கிளையினாலும் பெருகிவரும் நீரினால் சூழப்பட்ட பள்ள நிலப்பகுதி ஆகையால் அப் பகுதி நிலம் ''உளுவான் பிட்டிகள்'' என்று வழங்கப்படும். கணம் பிட்டிகள் நிறைய உடையதும் கடுமையான கழித்தன்மை கொண்ட மண் வாசி உடைய காரணத்தினாலும் அக்காணிகளைப் பண்படுத்துவது மிகுந்த சிரமத்துக்குரிய காரியமாக இருந்தது. இருந்தும் நம்மவர்கள் தமது தொழில் வாய்ப்பிற்காகவும், வறுமையின் காரணமாகவும் தமது உடல் வலிமையைக் கொண்டு பண்படுத்தி வேளாண்மை செய்யத் தொடங்கினர். இந்தக் காணிக்குப் பயன்படுத்தப்படும் நீர் சீனி ஆலையின் கரும்புத் தோட்டங்களுக்கு பயன்படுத்தி வடிநீராக அனுவசியமாக கடலில் கலக்கச் செல்லும் நீரையும் களுகங்கையின் ஒருங்கிணையையும் பயன்படுத்தியே செய்கை பண்ணிவந்தனர். இந்தப்பகுதி வேளாண்மைச் செய்கைக்கு மிகவும் பொருத்தமான காணிகள் அதிக விளைச்சலையும் கொடுத்துவந்தது. தேசிய வருமானத்தின் வீதத்தைக் கூட்டிக்கொள்ள உழைத்த இவர்களுக்கு கடைசியில் என்ன நடந்ததென்று பார்ப்போம்.

இப்பகுதிக்கு அருகாமையில் இருந்த நிலப் பகுதியை புகையிலைக் கூட்டுத்தாபனத்திற்குப் பயன்படுத்தும் நடவடிக்கையினைத் தீவிரப்படுத்தினர். வயல் பகுதிகளின் மேற்பகுதியை குளமாகக் கட்டினர். வயல்களுக்கும் நீர் தருவதாக ஏமாற்றினர். பின்பு தார்மீகம் தார்மீகம் என்ற தாரகமந்திரத்தைக் கொண்ட இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. 1977-ல் இருந்து காணி செய்கைபண்ணுபவர்களுடன் புகையிலைக் கூட்டுத் தாபனத்தினர் தொந்தரவுதர முற்பட்டனர். இதற்கு இப்பகுதி சிங்கள முதலாளித்துவ அரசியல் வாதிகளும் உடந்தையாக இருந்தனர். நாட்கள் செல்லச் செல்ல பயமுறுத்தல்களின் மூலம் ஆக்கிரமிக்கப்பட்டு வந்தது. இது சம்பந்தமான முழுத்தகவல்களையும் திரட்டிக் கொண்டு இப்பகுதி விவசாயிகள் தார்மீக அரசின் தலைவரென்று கூறிக்கொண்டிருக்கும் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. இவர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி ஆக்கிரமிப்பு நடவடிக்கையினைத் தாமதித்தாரே தவிர கைவிடவில்லை.

கடைசியில் இராணுவ நடமாட்டமும் ஊடுருவத் தொடங்கியது. இராணுவத்தினரும் தொந்தரவு செய்யத் தொடங்கினர். கடைசியில் இப்பகுதி விவசாயிகளை ஏமாற்றி அவர்களின் வயல் ஒன்றைப் பயன்படுத்தி அவர்கள் மூலமே எல்லா ஆயத்தங்களையும் செய்து, அவர்கள் மூலமே வயலையும் விதைத்து அவர்களுடைய சக்தியை இலவசமாகப் பயன்படுத்தி கடைசியில் அறுவடை செய்து தாம் எடுத்துக் கொண்டு, இன்றைய நிலையில் முழுவயல்களையும் ஆக்கிரமித்து விட்டு அவ் விவசாயிகளை விரட்டி அடித்து விட்டனர். தமது முழுப் பிரயாசத்தையும் பொருள்களையும் விரயம் செய்து பூரண மருத நிலமாக மாற்றிய நிலையில் வெளியேற்றப்பட்ட பின்புதான் சிங்கள முதலாளித்துவ அரசாங்கத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் தமிழ் பேசும் மக்களுக்குஇ வ்வரசு வழங்கும் நீதி பற்றியும் சிந்திக்கின்றனர்.

உதாரணமாக திருகோணமலைக்குச் செல்லும் பிரதான வீதிகளினோரங்களும் அத்துமீறிச் சிங்கள மக்கள் குடியேறுகின்றனர். அவற்றைத் தடுக்கவோ ரத்துச் செய்யவோ முன்வராத அரசாங்கம் கடைசியில் திருமலை பஸ்தரிப்பு நிலைய மைதானத்தில் சட்டத்திற்கும் ஒழுங்குக்கும் மாறாகக் கடைகளை வைத்திருக்க அனுமதித்தது.

பஸ்தரிப்பு மைதானத்தில் சிங்களவர்கள் ஆரம்பத்திலேயே கடைகளைக் கட்டுவதில்லை; முதலில் நான்கு சில்லுப் பொருந்திய பெட்டிகளை நகர்த்திக் கொண்டு வருவார்கள். அதனை மைதானத்தில் ஒரு ஓரத்தில் நிறுத்தி வியாபாரம் செய்வார்கள். பின்பு அதனோடு சேர்த்து நாலைந்து தடிகளைக் கொண்டு ஒரு பந்தல். இப்படியே நாலா பக்கமும் தொடுத்து நிரந்தரக் கடையாக்கி விடுவார்கள், பின்பு ஏதேனும் ஒரு பதட்டம், குழப்பம் ஏற்பட்டால் அந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் பேசும் மக்களுடைய நகைகள் பணம் போன்ற உடமைகளை கொள்ளையடித்தும் சிலரின் உயிரைப் போக்கியும் வாழ்வதைச் சில சான்றுகள் மூலம் ஏற்றுக் கொள்ள முடியும். இந்த நிலையை அரசாங்க மட்டத்தில் தீர்ப்பது முடியாத காரியமாக நம்பப்படுகின்றது. இப்பிரச்சனை காரணமாக திருகோணமலை நகரசபை நிர்வாக உறுப்பினர்கள் பெட்டிக் கடைகளையும் பஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கும் கடைகளையும் அகற்றும் தீர்மானத்தை நிறைவேற்றினர். முடியாமை

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்டசபைத் தேர்தல்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர்களுக்கிடையே போட்டி இன்மையினாலும், புதிய பிரசார முறைகளினாலும் தேர்தல் பரபரப்பும், கொள்கை மோதல்களும் பரவலாக இடம்பெறவில்லை. அதாவது சரியானமுறையில் இத் தேர்தலின் முக்கியத்தைப் புரியாத நிலைமையில், காலங்காலமாக வாக்குச்சீட்டு போடுவதைத் தவிர வேறெதையும் காணாத நிலையில் தமிழர் விடுதலைக்கூட்டணியின்மீது ஏற்பட்ட வேதனையும் வெறுப்பும் ஐ. தே. க. வுக்கு வாக்குகளைச் சேர்த்திருக்கலாம். ஆனால் அதைக்கொண்டு தமிழ்பேசும் மக்கள் ஈழக் கோரிக்கையை நிராகரித்துவிட்டார்கள் என்றோ, கொள்கைக் குழப்பம் கொண்டுள்ளார்கள் என்றோ யாரும் கூறிவிட முடியாது.

மாவட்ட சபைகளின் மகோன்னதம் பற்றியும், பதினைந்துக்கு மேற்பட்ட அமைச்சுக்களின் செயற்பாட்டு அதிகாரம் கொண்டது என்றும் பறை சாற்றியவர்கள் அவற்றை நிரூபித்துக் காட்டவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். அதுவும் அபிவிருத்திச் சபைகளுக்கான நிதி திறைசேரிமூலம் ஒதுக்கப்பட மாட்டாது என நிதி அமைச்சின் செயலாளர் வலியுறுத்தியுள்ள இவ்வேளையில், அத்துடன் ஈழத்தின் பொருளாதார வளங்களைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தை உணராது விடுதலைப் போராட்டத்தைக் காரணங்காட்டிக் காலம்தாழ்த்தி வந்தவர்கள், இனியும் அவ்வாறு செய்யமுடியாத நிலையில் உள்ளனர். சாதாரண விவசாய மீனவர் தொழிலாளர்களின் பிரச்சனைகளை ஈழத்தில் அவற்றைத் தீர்த்துக்கொள்ளலாம் இப்போ ஒற்றுமையாகப் போராடுவோம் எனப் பூசிமெழுகி ஒத்திப்போட்டுவந்த தீர்க்கதரிசனமற்ற அரசியல்வாதிகள் இனிமேலும் அப்படிச் செய்வதற்கு மாவட்ட அபிவிருத்திச் சபைகள்மூலம் முற்றுப்புள்ளி வைக்கப்படலாம். இந்தநிலையில் மக்கள் தமது அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள சமத்துவ சமதர்ம சமுதாயம் ஒன்றைப் படைக்கும் புத்தூக்கத்துடன் செயற்படப்போவது உறுதியானது. இதனாலேயே தமிழர்விடுதலைக்கூட்டணியும், அதன் தலைமைபீடமும் ஈழக் கோரிக்கையின் எட்டிமுனைக்கு தள்ளப்பட்டுள்ளது எனப்பகன்றோம். இவற்றை அடிப்படையாகக்கொண்டு பார்க்குமிடத்து ஈழக்கோரிக்கை வலுப்பெற்றுள்ளதே தவிர, வலுவிழந்து விடவில்லை.

இதனாலேயே மாவட்ட அபிவிருத்திச்சபைத்தேர்தல்களின் போது தமிழர் விடுதலைக் கூட்டணியினர், மாவட்ட அபிவிருத்திச்சபைகளின் அபிவிருத்தியும் எதிர்காலமும் என்றரீதியில் தமது மாற்றுத் திட்டங்கள்பற்றிய பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டும் என்று கடந்த இதழில் கூறியிருந்தோம். அத்துடன் கூட்டணியின் எதிர்தரப்பினர் முக்கியமாக அரசதரப்பினர் இந்தச்சூழ்நிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, மக்களைக்குழப்ப முயல்வார்கள் என்றும் கருத்துத் தெரிவித்திருந்தோம். பெரும்பான்மையான மாவட்ட சபைகளைக் கூட்டணி கைப்பற்றினாலுங்கூட ஏனைய சபைகளைக் கைப்பற்றும் எதிர்த்தரப்பினரால் ஈழக்கோரிக்கை விவாதத்திற்கு உரியதாகி மாவட்ட சபைகளின் மகோன்னதம்பற்றி எஃக்கப்படும் என்றும் கூறியிருந்தோம்.

ஆனால் குடியேற்றும், இன ஒடுக்கல் போன்ற பிரச்னைகளால் சதா பாதிக்கப் பட்டு வரும் தமிழ்பேசும் மக்கள் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட மாவட்ட சபைகளைக்கண்டு ஈழம் என்ற எண்ண அபிலாசைக் கோரிக்கையில் தடம்புரண்டு விட மாட்டார்கள் என்பது தெளிவு. இந்தத் தேர்தல்முடிவுகளின்படி ஈழவர்கள் ஈழக் கோரிக்கையைப் பிரதிபலிக்கச் செய்து தமது எண்ணஅபிலாசைகளை வெளிப்படுத்தியுள்ளனர். எனவே ஈழப்பிரசவத்திற்கான ஆக்கபூர்வமான கைங்கரியங்களில் ஈடுபட்டு சமத்துவ சமதர்ம சமுதாயமாக ஈழவர்களைக் கட்டிஎழுப்புவதே விடுதலைவிரும்பிகள் செய்யவேண்டிய பெரும் பணியாகும்.

# தமிழகப் பத்திரிகை....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்வலம் முக்கிய வீதிகள் வழியாக இலங்கைத் தூதரகத்தை அடைந்தது. அங்கே தூதரகம் அருகே மாணவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். ஆறுபேர் மட்டும் தூதுவரைச் சந்திக்க அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் தூதுவரைச் சந்தித்து மாணவர்கள் சார்பாகவும், இந்திய ஈழவர் நட்புறவுக் கழகம், தமிழ் கழகம், ஈழவர் கழகம் ஆகியவற்றின் சார்பாகவும் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

மேற்படி செய்திகளின் மூலம் தமிழக மக்கள் மட்டுமல்லாமல் தமிழக பத்திரிகைகளும் எந்தெந்த விதத்தில் இலங்கையில் ஈழவருக்கெதிராக நடந்த இன ஒடுக்குமுறைகளைக் கண்டித்து ஆட்சேபனைகளைத் தெரிவித்தார்கள் என்பது புலப்படும்.

பத்திரிகைச் செய்திகள் குறிப்பிட்ட சுவரொட்டிகள் "மீண்டும் எரிகிறது ஈழம்" என்ற தலைப்புடன் வெளியிட்டிருந்த பொழிப்பான செய்திகள் தமிழக மக்களின் கவனத்தை உறுத்தும் அளவுக்குக் கவர்ச்சியாகவிருந்தது. அவையாவன:

ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் தீக்கிரை.

நூல்நிலையம் தகர்க்கப்பட்டது.

யாழ் எம்.பி. வீடு தீக்கிரை

த. வி. கூட்டணி செயலகம் தகர்க்கப்பட்டது.

இளைஞர்கள் நூற்றுக் கணக்கில் கைது.

ஸ்ரீலக்கா பொலிஸ் இராணுவத்தின் அட்டகாசம் ஆக்கிரமிப்பு.

இதனைத் தமிழக மக்கள் கண்டிக்கிறார்கள். சிங்கள ஏதேச்சாதிகாரமே ஈழவர்மீது கை வையாதே!

இந்த சுவரொட்டியை எந்த கட்சிபேதமோ, கருத்து வேற்றுமையோ இன்றி தோழமை-சகோதரத்துவம்- மனிதாபிமானம் என்ற அடிப்படையில் தமிழகத்திலும், புதுதில்லியிலும் உள்ள ஆறு அமைப்புகள் சார்பில் வெளியிடப்பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது. இவ்வமைப்புகள் பலதரப்பட்ட சிந்தனைப்பாடுகளையும் — அதே நேரத்தில் ஆழ்ந்த அனுதாப நோக்கு மனப்பான்மையையும் பிரதிபலிக்கும் வண்ணம் இந்தியர் ஈழவர் நட்புறவுக் கழகம், தமிழக ஈழ நட்புறவுக் கழகம், தமிழீழத் தோழமைக் கழகம், தமிழ்நாடு திரும்பிய ஈழவர் நிறுவனம், தமிழக சமூக அரசியல் மேம்பாட்டு முன்னணி, தாயகம் ரும்பிய ஈழ மாணவர் இளைஞர் மன்றம் என்னும் ஆறு அமைப்புக்கள் தமது பங்கையும், பாங்கையும் சுவரொட்டி மூலம் தெரிவித்திருந்தன.

இச்சுவரொட்டிகள் ஏற்படுத்திய பரபரப்பு தமிழக தலைநகரில் புதியதொரு அத்தியாயத்தை ஏற்படுத்தியது. அதாவது வெறும் உணர்ச்சிக் கொந்தளிப்புக்கும், ஆவேசத்திற்கும் ஆட்பட்டுள்ள தமிழகத்தில் — தரகு சந்தை அபிமானிகளின் சார்பையோ அல்லது அவர்களது எண்ண வெளிப்பாட்டின் வெளிச்சமான பிரதிநிதிகளோ, முன்வராத பட்சத்திலும்கூட ஈழவரின் பிரச்சனை முழுமையாக தமிழக மக்களை கவர்ந்தது குறிப்பிடத்தக்கது. இதனாலோ என்னவோ கலைஞர் கருணாநிதியோ, புரட்சித் தலைவரோ, வீரமணியோ, ம.பொ.சியோ, இடதுசாரித் தலைவர்களோ பங்கெடுக்க முனையும் முன்பாக அனைத்து ஸ்தாபன ரீதியில் தமிழக-ஈழ நட்புறவுக் கழகம் சார்பில் "தமிழியக்கம்" ஆசிரியர் ந. அரணமுறுவல், தமிழீழத் தோழமைக் கழகம் சார்பில் "தென்மொழி" ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார், அனைத்துக் கல்லூரி மாணவர்கள் சார்பில் T. G. ஜெயக்குமார், தாயகம் திரும்பிய ஈழ மாணவர் மன்றம்-தமிழ்நாடு திரும்பிய ஈழவர் நிறுவனம் சார்பில் கதிர்வேல், லூசியதாஸ் ஆகியோர் தமது கண்டனத்தை தெரிவித்தது மட்டுமல்ல, தமது எதிர்ப்பை தெரிவிக்கும் விதத்தில் ஒரு ஊர்வலத்தையும் நடாத்தி முறையீட்டு மனுவை சென்னையில் உள்ள ஸ்ரீ லங்கா தூதுவரிடம் கையளித்தனர்.

இந்நிகழ்வுகளின் எதிரொலிப்பின் தாக்கினாலோ, என்னவோ கலைஞர் கருணாநிதி வடித்த "இரத்தக் கண்ணீர்" பற்றி "முரசொலி" "மாலைமுரசு" குறிப்பிட்டிருந்தன. இந்த வடிப்பின் வார்ப்பாகவே முரசொலியில் கலைஞர் கடிதம் அமைந்தது. அதில் குறிப்பிட்ட அபிப்பிராய கருத்துக்களில் முக்கியமானது என்னவெனில் "இலங்கையின் நெருக்கடி சூழ்நிலையில் இந்திய அரசின் தலையீட்டைக் கோரியதே." இதையே மாணவர்களும் தமது அறிக்கையில் "அவசியமானால் ஈழத்தமிழர் பிரச்சனையை இந்திய துணைக்கண்ட மாணவர்களுக்கு விளக்கி அதன் மூலம் இந்திய அரசை மட்டுமல்ல, நல்லெண்ணம்கொண்ட உலக நாடுகளையும், முற்போக்கு சக்திகளையும் இலங்கையில் தலையிடச் செய்து ஈழவரின் பிரச்சனையை தீர்க்கத் தயங்கமாட்டோம்" எனக் குறிப்பிட்டிருந்தார்கள். மேலும் இதனை வலியுறுத்தும் வகையில் அனைத்திந்திய ஸ்தாபனங்களின் சார்பில் தூதரிடம் கையளிக்கப்பட்ட முறையீட்டறிக்கையில் திரும்பத்திரும்ப இனக்கலவரங்களாலும், மற்றும் அரசின் இன ஒடுக்கல் கொள்கையினாலும் பாதிக்கப்படும் ஈழவர்களாகிய இலங்கைவாழ் தமிழர்களின் கோரிக்கையை தாம் அனுசரிப்பதோடு அரவணைப்பதாகவும், இன்று இலங்கையில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடியான சூழ்நிலையில் இலங்கைத் தமிழர்களுக்கு 'ஈழம்' என்ற தேசிய ஸ்திரணமே மார்க்கம் எனவும், அதேபோல் சிங்கள மக்களுக்கு 'ஸ்ரீலங்கா' தேசிய ஸ்திரணமே அர்த்த புஷ்டி எனவும் இவை இரண்டின் முனைப்பிலேயே இலங்கையின் ஒற்றுமை சாத்தியம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் குறிப்புக்கு வலுவேற்றும் வண்ணம் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் இந்தியர்-ஈழவர் நட்புறவுக் கழகமும் முறையீட்டைச் சமர்ப்பித்துள்ளது முக்கியமானது. அவர்களது கருத்தை புதுதில்லியில் இருந்து வரும் "டைம்ஸ் ஒப் இந்தியா" (Times of India) பிரசுரித்துள்ளது.

# மேற்காசியாவில்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏவுகணைகளைத்திரும்பப்பெறும் பட்சத்தில், சண்டை மூண்டுள்ள ஷால்நகரப் பிரதேசத்தில் கிறிஸ்தவ வலதுசாரிப் படைகள் வாபஸ் பெறுவதற்கும், சிரிய-லெபனான் எல்லையில் இஸ்ரேலிய விமானங்கள் பறப்பதைத் தவிர்க்கவும் தான் இணக்கம் தெரிவித்து உள்ளனர்.

இவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது இது உண்மையான சமாதானப்பேச்சுவார்த்தையா? அல்லது அமெரிக்க-இஸ்ரேலிய நலன்களைப் பாதுகாப்பதற்கான பேரம் பேசுதலா? என்ற கேள்வியையே எழுப்பத் தோன்றுகிறது. அத்துடன் இதுவரை காலமும் பாலஸ்தீனிய முகாம்கள்மீது இஸ்ரேல் எந்தக் கட்டுப்பாடுமின்றி விமானத் தாக்குதல் நடத்தி அழித்தபோது தடுக்காத அதேவேளையில் இன்று இஸ்ரேலிய விமானங்களின் சுதந்திரமான தாக்குதல்களுக்கு இடப்பட்டுள்ள தடைகளை அகற்றுவதில் இவர்கள் அக்கறை காட்டுவதன் அடிப்படைக் காரணத்தையும் ஆராயத் தூண்டுகிறது.

தற்போதைய நிலையில் சிரியாவின் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் லெபனானில் நிலைகொண்டுள்ளமையாலும், சிரியாவிற்கு ஆதரவாகச் சவூதி அரேபியா, ஈராக்போன்ற நாடுகள் செயற்படுவதாலும் ஏற்பட்டுள்ள படைபல சமநிலையே இன்று இஸ்ரேலையும் அமெரிக்காவையும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அக்கறைகாட்டச் செய்துள்ளது.

ஆனால் சோவியத் ஜனாதிபதி மத்திய கிழக்கில் பதட்டத்தைத் தணிக்க மத்திய கிழக்கு நாடுகளின் உச்சி மாநாடு ஒன்றைக் கூட்டுமாறு வெளியிட்ட ஆலோசனையை — அவ்வாறான ஒரு மாநாட்டைக் கூட்டுமிடத்து வெளியாரும் (சோவியத்தும்) அதில் பங்குகொள்ள வேண்டி வரும்என்பதைக் காரணமாகக் காட்டி முற்றாக நிராகரித்த அமெரிக்கா தான் ஏதோ உள்வீட்டுப் பிள்ளை போல நடந்துகொள்வது விசனிக்கத்தக்கது.

மத்திய கிழக்குச் சிக்கலில் அடிப்படைப் பிரச்சனையாக உள்ள பாலஸ்தீனிய மக்களின் எதிர்காலம் குறித்துச் சிந்திக்காமல், வெறுமனே காலத்திற்குக் காலம் பேரம் பேசுவதன் மூலம் சமாதானத்தை நிலைநிறுத்தலாம்என அமெரிக்கா முற்பட்டால் அது கனவு காணுகிறது என்றே பொருள்படும்.

# கந்தளாயில் காணி....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யினால் பொலீஸ் நடவடிக்கை எடுத்து ஒரு சில கடைகளை அகற்றினர். உடனே பஸ் தரிப்பு லையத்தில் கடைகள் வைத்திருக்கும் சுமார் 40வரையிலான கடைக்காரர்கள் பரிதாபப் படக்கூடிய நிலையில் மேலங்கிகளைக் கழற்றி அரைகுறையான உடைகளுடன் குழந்தைகளையும் தூக்கிக் கொண்டு குடும்ப சகிதம் வெயிலில் அனாதையாக நிற்பதைச் சித்தரிக்கும் வண்ணம் புகைப்படமெடுத்து பிரதம மந்திரிக்கு அனுப்பியதன் மூலம், பிரதம அமைச்சினை தலையிடவைத்து. திருகோணமலை நகரசபை நிர்வாகத்தின் தீர்மானத்தை பழையபடி கைவிடச் செய்து பெட்டிக் கடைகளும் அத்துமீறிய கடைகளும் மக்களின் விருப்பத்திற்கும் அமைதிக்கும் மாறாக செயல்பட வழி வகுக்கப்பட்டது.

படிப்படியாக நடைபெற்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளும், இக்கால கட்டத்தில் நடைபெறுகின்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளும் தமிழ்பேசும் மக்களின் இதயத்துடிப்பில் ஈழவிடுதலையை அழுத்தி ஒலிக்க வைக்கின்றது. மதம், மொழி, பதவி உயர்வு, பல்கலைக்கழகக்கல்வி என்பவற்றையே பாரிய பிரச்சனையாக்கித்தம்பட்டமடிக்கும் அரசியல்வாதிகளுக்கு திட்டமிட்ட இன ஒடுக்கல் நடவடிக்கைகளால் தமது சொந்த நிலங்களைக்கூட இழந்து தவிக்கும் மக்கள் அடிப்படைப் பிரச்சனை, உடமைப்பாட்டு ரீதியானது என்பதனைப் புரிந்துகொள்ளும்படி சுட்டிக்காட்டுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்திகள்

## மத்திய கிழக்கிலும், இந்து சமுத்திரத்திலும் : அமெரிக்க இராணுவ தளங்கள்

அமெரிக்க றீகன் நிர்வாகம் மத்திய கிழக்கிலும், இந்துசமுத்திரப் பிராந்தியத்திலும் இராணுவ தளங்களை நிறுவ எதிர்வரும் ஐந்து வருடத்தில் இரண்டு பில்லியன் டாலர்களைச் செலவிடும் என International Herald Tribune தெரிவிக்கிறது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: செங்கடலிலுள்ள ராஸ்பன்னுஸ் (Ras Banas)ல் இராணுவ தளத்தை நிறுவவும், எகிப்திய துறைமுகம் ஒன்றுக்காகவும் புதிய வரவு-செலவுத் திட்டத்தில் 106·4 கோடி டாலர்களை அமெரிக்கா கோரியுள்ளது. பிரித்தானியாவின் முன்னைய தளங்களில் ஒன்ருன ஓமானில் உள்ள மஸ்ரியா (Masria)வைப் புனரமைப்பதற்கு 75கோடி டாலர்களைக் கோரியுள்ளது. அத்துடன் இந்துசமுத்திரத்தில்உள்ள டியாகோ கார்சியாவின் இராணுவ தளத்திற்கு 237·7கோடி டாலர்களைச் செலவிட உத்தேசித்துள்ளது.

## தென் ஆபிரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு அமெரிக்கா உதவி

கிழக்கு ஜெர்மனியின் செய்தி ஸ்தாபன ADN மார்ச் 29-ல் லுவான்டாவில் இருந்து தெரிவித்ததாவது: தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் இயக்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், நம்பியாவின் சுதந்திரத்திற்கு எதிராக நமீபியாப் பிரதேசத்தை சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ளவர்களுக்கு ஐக்கிய அமெரிக்க நிர்வாகத்தின் கொள்கைகள் ஆதரவாக உள்ளனஎனக் கூறியுள்ளது.

தென் ஆபிரிக்க மக்கள் இயக்கம் உலக மக்களை விழிப்புக் கொள்ளுமாறும், ஐக்கிய அமெரிக்காவின் ஐக்கியநாடுகள்சபைப் பிரதிநிதி பேராசிரியர் Kirkparickகும் இதன் ஆபிரிக்க புலனுய்வுத் துறையினரும் சந்தித்துப் பேசியுள்ளதாகவும் கூறியுள்ளது. தென் ஆபிரிக்க புலனுய்வுக்குழு ஐக்கிய அமெரிக்காவிற்கு விஜயம்செய்து "பென்டகனின்" உதவியுடன் தென்ஆபிரிக்க இனவெறிஅரசு அதிரடிப் படைகளை நிறுவ இணக்கம் தெரிவித்துள்ளது. அத்துடன் ஐக்கிய அமெரிக்கா ஆபிரிக்காவின் சுதந்திர நாடுகளான அங்கோலா, மொசாம்பிக் ஆகியவற்றிற்கு எதிராகத் தென் ஆபிரிக்காவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்துவருகிறது. அமெரிக்க தயாரிப்பான Kfir சண்டை விமானங்களை இஸ்ரேல் தென் ஆபிரிக்காவிற்கு வழங்க அமெரிக்கா சம்மதம் தெரிவித்துள்ளது.

## தென் ஆபிரிக்காவுக்கு பொருளாதாரத் தடை

ஆபிரிக்க அரசுகளின் வேண்டுகோளுக்கிணங்க ஏப்ரல் 22-ல் கூட்டப்பட்ட ஐக்கியநாடுகளின் பாதுகாப்புச் சபையானது நமீபிய சுதந்திரத்தைக் கருத்திற்கொண்டு இனவாத தென்ஆபிரிக்க அரசுக்கெதிராகப் பொருளாதாரத் தடையினை அமுல்படுத்தும்படி கோரியது. இனவாதத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து போராடிய அங்கோலா, மொசாம்பிக், சிம்பாப்பே ஆகியவற்றின் வெற்றியைத் தொடர்ந்து தென் ஆபிரிக்காவுடன் தனது நட்புறவை வலுப்படுத்தியுள்ள அமெரிக்கா மேற்படி தீர்மானத்தினை தனது 'வீட்டோ' அதிகாரத்தைப் பாவித்து ரத்துச்செய்ய முற்படலாம்என எதிர்பார்க்கப் பட்டது.

## நிக்காரகுவா மெக்சிக்கோ ஆகியவற்றிற்கு எதிராக அமெரிக்க மிரட்டல்

மெக்சிக்கோவிற்கு இரண்டுநாள் விஜயத்தை மேற்கொண்ட நிக்கரகுவா புரட்சியின் தளபதி நிக்காரகுவா மெக்சிக்கோ ஆகியவை அமெரிக்காவினுல் தாக்கப்படுவதாகக் கூறினுர் என கியூபா செய்தி ஸ்தாபனமான (Prensa Latina) செய்தி வெளியிட்டது. அவர் மேலும் பேசுகையில் நிக்கரகுவா வாஷிங்டனுல் பொருளாதார ரீதியாக மட்டுமின்றி, நாட்டை ஊடுருவுவதற்குப் பயிற்றுவிக்கப்பட்ட புளோரிடா எதிர்ப் புரட்சியாளர்களினுலும் தாக்கப்பட்டுவருகிறது, நிக்கரகுவா புரட்சிகர அரசுக்கு மெக்சிக்கோ வழங்கும் உதவியானது நிக்கரகுவா புரட்சியின் தன்மையினையும், சர்வதேச பாட்டாளிகளின் ஒத்துழைப்பையும் அமெரிக்கா உணருவதற்கு வாய்ப்பளிக்கும் எனக் கூறினுர்.

## விஷவாயு உற்பத்தி 2கோடி டாலர் அமெரிக்க செனட் அங்கீகரிப்பு

வாஷிங்டன் மே 22.

இரசாயன ஆயுதங்கள் உற்பத்தித் திட்டத்தின்கீழ் விஷ வாயு உற்பத்திக்கு இரண்டு கோடி டாலர்களை அமெரிக்க செனட்சபை அங்கீகரித்துள்ளது.

இந்நடவடிக்கையை எதிர்ப்போர் இரசாயன ஆயுதங்கள் மிருகத்தனமானவை எனக் கூறியுள்ளனர். முக கவசத்தினுல் வீரர்கள் இவ்வாயுவிடமிருந்து பாதுகாக்கப்படுவதாகவும், ஆனுல் பொதுமக்கள் மட்டுமே பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். இந்த விஷவாயு மனிதனை ஓரிரு நிமிடங்களில் கொன்றுவிடும் வலிமை மிக்கது.

## உலக செல்வத்தில் 60 சதவீதத்தை அனுபவிப்போர் 13சதவீதமே உலக வங்கியின் திரட்டுத்தரும் தகவல்

உலக வருமானத்தில் 60 சதவீதத்தை உலக சனத்தொகையில் செல்வந்த நிலையிலுள்ள 13 சதவீதத்தினர் மட்டுமே அனுபவிக்கின்றனர். வறிய 48 சத வீதத்தினர் 5 சதவீதத்துக்கும் குறைவான வருமானத்தையே அனுபவிக்க முடிகிறது. உலக சனத்தொகையில் அரைப்பங்கைக் கொண்ட 36 நாடுகளின் வருடாந்த சராசரி வருமானம் 1978-ம் ஆண்டில் 300 டாலர்களுக்கும் குறைவானதாகும். ஆனுல் உலக சனத்தொகையில் ஏழில் ஒரு பங்கைக் கொண்ட 25 நாடுகளின் வருடாந்த சராசரி வருமானம் 7000 டாலர்களுக்கும் அதிகமானதாகும். இவ்வாறு 1980-ம் ஆண்டிற்கான உலக வங்கி வரைபடத் திரட்டு ஒன்றில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

உங்கள் ஆக்கங்களை 'தர்க்கீகம்' வரவேற்கின்ற, அதே வேளையில் தர்க்கீகத்தை நீங்கள் திறனுய்வு செல்யலாம். அதன் மூலம் 'தர்க்கீகம்' மேலும் தன்னை செழுமைப்படுத்திக் கொள்ளும். உங்கள் ஆக்கங்கள் எங்கள் சமூக நிலையை எடுத்துரைப்பவையாகவும் சமூக மாற்றத்தைக் கோருபவையாகவும் அமையட்டும்.

**"தர்க்கீகம்"**

த. பெ. எண். 103, யாழ்ப்பாணம்.

தொடர்ந்து 'தர்க்கீகம்' பெற விரும்புகிறீர்களா? உங்கள் சந்தாவினை உடனே செலுத்துங்கள்.

இப்பத்திரிகை ஊரெழு கிழக்கு எஸ். விக்கினேஸ்வரன் அவர்களால் யாழ்ப்பாணம் பிரதான வீதி 360-இலக்கத்திலுள்ள புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




"நீறு பூத்த நெருப்பாய்க் கிடக்குமோ?
நெய்யைப் போல் கொதித்தாறி உறையுமோ?"

— பாரதிதாசன்

யாழ்ப்பாணம் மீண்டும் எரிந்துவிட்டது. 1977 கலவரத்தின் பின்னர் இப்படியான நிகழ்ச்சி இனியும் ஏற்படாது என்ற உறுதிமொழிகளையும், இன்னும் 10 வருடங்களுக்கு இப்படி ஏற்படாது என்ற அவதானிப்புகளையும் மீறி, மீண்டும் நாலாண்டுகளுக்குள் தீச்சுவாலைகளாலும், துப்பாக்கி வேட்டுக்களாலும் ஈழத்தின் ஒரு பகுதி மக்கள் கண்ணீர் சிந்த வேண்டியதாயிற்று.

ஆனுல் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளும், அச்சுறுத்தல்களும் விமோசன விடுதலைக்கான போராளிகளுக்கு புதியதுமல்ல—அதிர்ச்சியுமல்ல. ஏனெனில் உலக அரங்கின் பல நிகழ்வுகள் எமக்குப் பாடம் போதித்துள்ளன. எங்கள் காலத்திலேயே வியட்நாமின் "மைலாய்" கிராமத்தை அமரிக்கக் கழுகுகள் சுற்றி வளைத்து தனிமைப் படுத்தித் தாக்கியதைப் படித்துள்ளோம்.

இச் சம்பவங்களைக் கண்டு உணர்ச்சிக் கொழ்தளிப்புகள் மேலிட வெறும் பரபரப்பின் அடிப்படையில் அநியாயம், அக்கிரமம் என்று கூக்குரலிட்டு ஓய்ந்து விடுவது அர்த்தமுள்ளதாகாது. அடக்கியாளும் அரசினர் எமக்குத் தரக்கூடிய பரிசில்களே இவை என்பதைப் புரிந்துகொண்டு முன்னேறிச் செல்ல வேண்டியதே தர்க்கீகமானது.

இன்றைய இந்த நிகழ்வுகள் எவ்வித முன்யோசனையுமற்று, தமிழ் பேசும் மக்களின் தேசிய அந்தஸ்துக் கோரிக்கையை வெறும் பிரகடனப் பிரச்சனையாக்கிக் கொக்கரித்த கற்பனை உலகவாதிகளை யதார்த்த சூழ்நிலைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமைக்கு இட்டுவந்துள்ளது.

அங்கொன்று இங்கொன்ருக நிகழ்ந்த துப்பாக்கி வேட்டுகளாலும், வீரதீரச் செயல்களையும் கேள்வியுற்று ஏதோ பெரிய படைபலம் உண்டென்ற கற்பனையினுல், அவர்களே விடுதலையைப் பெற்றுத் தந்து விடுவார்கள் என்று சிந்தித்தவர்களுக்கு அவர்களது வெற்றுத் தனத்தையும், கையாலாகாத் தன்மையினையும் இன்றைய சூழ்நிலை புட்டுக் காட்டிவிட்டது.

எனவே தான் விடுதலையும் விமோசனமும் யாரும் பெற்றுத் தந்து விடுவதல்ல என்பதனை உணர்ந்து, அவற்றைப் பெற்றுக்கொள்ள தம்மைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டிய மாபெரும் பொறுப்பு ஈழவர்களாகிய தமிழ்பேசும் மக்கள்மீது சுமத்தப்பட்டுள்ளது.

ஆனுல் இன்றைய அரசியல் நெருக்கடியில் தவித்துக் கொண்டிருக்கும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள், தமது சுதந்திரத்திற்கும் சுபீட்ச விடுதலைக்கும் போராட வேண்டிய அத்தியாவசிய சூழ்நிலையில், அவர்கள் நடத்தும் – நடத்தப்போகும் போராட்டம் எந்த வகையில் அமைய வேண்டும் என்பதில், இன்றைய அவர்களது தலைவர்களுக்கு தெளிவான எண்ணமும் திட்டமும் இல்லை என்பதற்கு அண்மைய சம்பவங்கள் தெளிவான சான்றுகளாகும்.

இந்தப் பின்னணியிலே தமிழ் பேசும் மக்கள் தமது பொறுப்புக்களை ஆழ்ந்து சிந்தித்து ஆக்கபூர்வமான கைங்கரியங்களில் ஈடுபடவேண்டியது அவர்கள் கடமையாகின்றது. அவ்வாருன ஒரு செயற்பாட்டிற்கு தேவையான அடித்தளச் சூழ்நிலைகளை உருவாக்கி—நெறிப்படுத்த வேண்டியது தர்க்கீக வாதிகளைச் சூழ்ந்துள்ள பணியாகும்.

ஆகவே தான் இன்றைய சம்பவங்கள் நீறு பூத்த நெருப்பாய்க் கிடந்து, பெருங் காட்டுத் தீயை மூட்டுமா? அல்லது நெய்யைப்போல் கொதித்து ஆறி உறைந்து போய்விடுமா? இதில் ஈழவரின் பங்களிப்பு முன்னதையே பிரதிபலிக்கும், இதர்க்கு (தர்க்கீகம்) தளம் இடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org